ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

ப்ரதிபத தாத்பர்யம்

ஸ்ரீ ஆண்டாள் சரித்திர வைபவமும்

...ன்றன

...நாயகர் ஸன்ஸ்
சென்னை-1.

ஸ்ரீ

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

ப்ரதிபத தாத்பர்யம்

ஸ்ரீ ஆண்டாள் சரித்திர வைபவமும்
அடங்கி யிருக்கின்றன

பிரசுரித்தவர்கள் :

B. இரத்தின நாயகர் சன்ஸ்

சென்னை-1

1954

பதிப்புரிமை] —— [விலை அணா 6.



ஸ்ரீ ஆண்டாள்

4-1

ஸ்ரீ

ஆண்டாள் வைபவம்

கர்க்கடேபூர்வபல்குந்யாம் துளஸீகாநநோத்பவாம்—
பாண்ட்யேவிஶ்வம்பராம்கோதாம் வந்தேஸ்ரீரங்கநாயகீம்.

பராத்பரமாகிய ஸ்ரீமந் நாராயணன் திருப்பாற்கடலில் யோகநித்திரை தெளிந்து ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிகளாகிய பிராட்டிமார் மூவரோடு நவரத்நகசிதமாகிய சிங்காஸனத்தின்மேல் எழுந்தருளியிருந்தனர்.

அப்பொழுது பிராட்டிமார் மூவருள் பூப்பிராட்டியாரெழுந்து, எம்பெருமான் திருவடிகளை வணங்கிக், கைகுவித்து நின்றுகொண்டு, "ஸ்வாமி! பூலோகத்திலுள்ள மக்களுள் யாவரிடத்தில் தேவரீர் பிரியங்கொள்வீர்?" என்று கேட்டருளினர். ஸ்ரீமந் நாராயணன் பிராட்டியாரது திருமுகத்தைக் குளிர நோக்கிப் புன்னகைகொண்டு, "அநித்யமாகிய பிரபஞ்சத்தில் பற்று வையாமல் நித்யமாகிய நமது பரமபதத்தினிடத்துப் பற்று வைத்து, இடைவிடாது பக்தி பூர்வகமாக நம்மை நினைத்து, நமது விஷயமாகப் பாமாலையும் பூமாலையுந் தொடுத்துச் சாத்துகின்ற பாகவதர்களிடத்தே பிரியங்கொள்வோம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அதுகேட்டுப் பூதேவியார்: "ஸ்வாமி! அடியேனும் அந்தப் பிரகாரம் தேவரீர் விஷயமாகக் கைங்கர்யங்களைத் திருவுள்ள முவக்கும்படி செய்துவந்தாலல்லவோ இத்தேகம் எடுத்ததனாலாகிய பயனைப் பெற்றுக்கொள்வேன். ஆதலால், அடியேனையும் அவ்வாறு செய்வித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். ஸ்ரீமந் நாராயணன்: "பூலோகத்தில்

நமது பக்தனாகிய விஷ்ணுசித்தன் என்னும் விப்ரோத்தமன் ஸ்ரீ வில்லிபுத்தூ ரென்னுந் திவ்யதேசத்திலிருந்துகொண்டு அந்தக் கைங்கர்யங்களைச் செய்து வருகின்றான்; அவருக்கு நீ புத்திரியாக வுதித்து உன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவாய்" என்று சொல்லியருளினர்.

அதுகேட்டுப் பூதேவியார் அதிக ஆநந்த மடைந்து, "ஸ்வாமி! வில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தின் வரலாறும், அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கின்ற தேவரீரது லீலையும், அந்தப் பாகவதரது பெருமையும் அடியேனுக்குத் தெரிவித்தருள வேண்டும்" என்று ப்ரார்த்தித்தனர். ஸ்ரீமந் நாராயணன் திருவுள முவந்து, "பூலோகத்தில் ஜம்பூத்வீபத்தில் தக்ஷிணதிசையிலுள்ள பாண்டிய தேசத்தில் ஒரு திவ்ய க்ஷேத்திர முண்டு. அதனிடத்து அர்ச்சாவதாரமாக இருந்த நாம், பூர்வம் உனக்குத் துன்ப முண்டாக்கிய இரணியாக்ஷனை வராகவடிவங்கொண்டு வென்று உனக்குப் பல தர்மங்களையும் உபதேசம் பண்ணினோம். அப்பொழுது நீ 'இவ்விடத்தில் இவ் வுருவோடு எழுந்தருளி யிருக்கவேண்டும்' என்று நம்மைப் பிரார்த்தித்தபடி நாம் அத் தலத்தில் வராக வுருவத்துடன் அநேக கற்பங்கள் உன்னோடு கூடியிருந்தோம். பின்பு ஆரண்யமாக அநேககால மிருந்தது. அதில் ப்ருகு, மார்க்கண்டேயர் முதலான ரிஷிகள் இருந்து நம்மிடத்தில் அன்புவைத்துத் தவஞ்செய்யும்போது, காலநேமியென்னும் ராக்ஷஸன் அவர்கள் செய்யுந் தவத்துக்கு இடையூறு செய்ய, அவர்கள் நம்மைக் குறித்து முறையிட, நாம் திருப்பாற்கடல் விட்டு வந்து அவனைச் சக்ராயுதத்தால் ஸம்ஹரித்தோம். பின்பு அவனது இரத்தந் தோய்ந்திருந்த சக்கரத்தைக் கழுவும்படி வருணனுக்கு ஆஞ்ஞாபித்தோம். அவன், கங்கை யமுனை ஸரஸ்வதி யென்னு மூன்று நதிகளை

யும் அவ்விடத்திலழைத்து, அவைகளில் சக்கரத்தில் படிந்த இரத்தத்தை அகற்றினன். அன்றுதொட்டு அந்தத் தீர்த்த மூன்றும் திருமுக்குளம் என்று பேர்பெற்று அந்த க்ஷேத்தி ரத்தி லிருந்தது. அந்த ரிஷிகள்: 'எங்கள் நிமித்தம் திருப் பாற்கடல் விட்டு எழுந்தருளியபடி இந்த க்ஷேத்திரத்தில் சேஷசாயியாய் ஸேவை ஸாதித்தருள வேண்டும்' என்று ப்ரார்த்திக்க, அவ்வாறே வடபத்ரத்தில் சேஷசயனத்தின் மேல் படுத்திருக்கும் பாவனையாக ஸேவை ஸாதித்தோம். அதனுல் அத் தலத்திற்கு வடவேசுவரபுரம் என்றும், நமக்கு வடவேசுவரன் என்றும் பெயருண்டாயிற்று. அவ்வாறு அறுபத்துநாலு சதுர்யுகம் தேவர்கள் முனிவர்கள் ஆராதிக்க உன்னேடும் லக்ஷ்மியோடுங் கூடியிருந்தோம். இவ்வாறு பல யுகங்கள் சென்ற பின்பு திரும்பவும் ஆரண்யமாய் கொஞ்சம்புத்தூர் என்று ஒரு பேர் உண்டாக்கிச் சமீபத்தில் வேடர்கள் அநேகர் குடிகொண்டு அவர்களே அவ் வூர்க்கு அதிகாரிகளாக இருந்தார்கள். அவ் வேடக் குடியில் மல்லி யென்னும் ஸ்திரீயினிடத்தில் வில்லி என்றும், கண்டன் என்றும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் வலி யுள்ளவர்களாகையால் அவ் வேடச்சேரியில் அதிகாரிகளாக இருந்தார்கள்.

அவ்வா றிருந்தவர்கள் ஒரு நாள் வேட்டையாடப் புறப்பட்டு அந்த ஆரண்யத்திற் புகுந்து, புதல் மூடிக்கொள்ள நாம் சயனித்திருந்த இடத்திற்குச் சமீபமாக வரும்போது அங்கொரு புலியைக்கண்டு இளையவனை கண்டனென்பவன் அதைத்துரத்தியோட, அப் புலியானது ஓர் புதல் மறைவிற் பதுங்கி நின்று, அவன் சமீபத்தில் வரக் கண்டு அவன் மேற் பாய்ந்து கொன்றுவிட்டது. அதை யறியாமல் தமயனை வில்லியென்பவன் தம்பியைத் தேடிப்போய்த் தம்பி

பிறந்து கிடக்கிறதைக் கண்டு அழுதழுது, கீழ் விழுந்து புரண்டு புரண்டு மூர்ச்சையாயினன்.

அவன் கனவில் நாம்போய், 'அப்பா! இவ்விடத்தில் நாம் சேஷசயனத்தில் சயனித்திருக்கிறோம். நீ நமக்குக் கோயில் முதலானவைகளைக் கட்டுவித்து, நால்வகைக் குடிகளையும் ஏற்றி, நித்தியமாக ஆராதனம் திருவிழா முதலியவைகளும் நடத்துவாய்' என்று சொல்லினேம்.

அவனும், 'ஸ்வாமி! புலியினு லிறந்த என் தம்பியை எழுப்பிக்கொடுத்து, வேண்டிய திரவியங்கள் வரும் வழியுங் காட்டியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தான். அதற்கு நாம்: 'உன் தம்பி உயிர் பெற்றெழுவான்; நீயும் அவனுமாகக் கூடி அவனைக் கொன்ற புலி இறந்து கிடக்கின்ற அந்தக் குகையுள் இருக்கின்ற அளவிறந்த திரவியங்களை எடுத்துக்கொள்' என்று ஆஞ்ஞாபித்தோம்.

அவனுங்கண்விழிக்க, தம்பியும் உயிர்பெற்றெழுந்து வரக்கண்டு, அதிசயமடைந்து, சந்தோஷத்துடன் தம்பிக்குத் தான் கண்ட கனவைத் தெரிவித்து, அவனுடன் சிலதூரம் போகும்போது, அங்கு ஒரு குகையில் அந்தப் புலியானது அம்புபட்டு இறந்து கிடக்கின்றதைப் பார்த்து ஆச்சர்யமடைந்து, அக் குகையிலுள்ள அளவிறந்த திரவியங்களைக் கண்டு ஸந்தோஷித்து, அந்தக் குகையை முத்திரையிட்டுக் காவல் செய்து, பின்பு 'ஸ்வாமி! எங்கே சயனித்திருக்கின்றது' என்று தேடிக்கொண்டுபோக, அங்கோரிடத்தில் ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் மூடிய புதரினிடமாக நம்மைக் கண்டு ஆநந்த மடைந்து, அந்தத் திரவியங்களைக்கொண்டு நமக்கு விமானம் மண்டபம் மதில் கோபுர முதலியவைகளுங் குறைவில்லாமல் கட்டுவித்துத் திருவீதி முதலானவைகளும் ஏற்

படுத்தி, பின்பு அதை யடுத்த கொஞ்சம்புத்தூரென்னும் ஊரிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலானவர்களை வருவித்து அதில் குடியேற்றித், திருவிழா முதலானவைகளை விபவமாக நடப்பித்து, குடியேறிய பிராமணர் முதலானவர்கள் முன்னிருந்த புத்தூரும் தன் பெயராகிய வில்லியென்பதுஞ் சேர்த்து வில்லிபுத்தூர் என்றும், பழைமையாக விருந்த க்ஷேத்ரத்தைத் தான் புதுக்கியபடியால் புதுவை யென்றும் பேர் விளங்கவைத்தான். இவ்வாறு திருவிழா முதலான சிறப்புக்களைத் தேவர்களுங் கண்டு அதிசயிக்கும்படி நெடுநாள் செய்வித்துவந்து, பின்பு தன் தம்பியுடன் ஸ்ரீவைகுண்டம் சேர்ந்தான்.

இப்பால் பட்டர்பிரானுகிய விஷ்ணுசித்தர் யாரென்ருல், "நமது கருடாம்சம், உலகத்தவரைத் திருத்தும் பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து, ஐந்து வயதிலேயே நித்யவஸ்து நாமென்று அறிந்து, அதுதொட்டு நந்தவனங்கள் வைத்து வளர்த்து, நமக்கும் பூமாலை கட்டிச் சாத்திக் கொண்டு, பாண்டியனது சபையிற் கட்டிய பொற்கிழியை யறுத்துப் பரசமயங்களைக் களைந்து, ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்த ஸ்தாபகஞ் செய்து, அரசன் முதலான ஸமஸ்தரையும் திருத்தி, மற்றவர்களையுந் திருத்தும்பொருட்டு நமது லீலைகளை யமைத்துச் செந்தமிழாற் பாமாலைகளுந் தொடுத்துச் சாத்தி வருகின்ருர்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

பூதேவியார் அதகேட்டு ஆநந்தமடைந்து, எம்பெருமானிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, தேவர்கள் முனிவர்கள் பூமாரிபொழிந்து ஸ்துதிக்கவும், ஸ்ரீமந் நாராயணனுடைய திருவுள்ளந் தொடர்ந்து வரவும், உலகத்திலுள்ள ஜீவான்மாக்களெல்லாங் கடைத்தேறவும், அநேக அற்புதங்கள்

உண்டாகி விளங்கவும், ஸ்ரீ வில்லிபுத்தூரிலே விஷ்ணுசித்த ராகிய பெரியாழ்வார் வைத்து வளர்த்து வருகின்ற நந்த வனத்திலுள்ள திருத்துழாயினிடமாகக் கலியுகம் ௯அ - ஆவ தான நளவருஷம் - ஆடிமீ - சுக்லபக்ஷம் - சதுர்த்தசி - செவ்வாய்க்கிழமை கூடின பூரநக்ஷத்திரத்தில் அவதாரஞ் செய்து, கோடி சூரியப் பிரகாசம்போற் பிரகாசித்திருந்தார்.

விஷ்ணுசித்தர், காலையில் நந்தவனத்திற்குவந்து கைங் கர்யஞ் செய்துகொண்டு வரும்போது ஓர் துளஸியின்மேல் பிரமிக்கத்தக்க பிரகாசமயமாக விருக்கின்ற பெண்சிரோ மணியைக் கண்டு ஆச்சர்யமும் அன்புங்கொண்டு, "ஓகோ! இந்த ஸ்ரீரத்நம் நமது கண்மணிபோன்ற எம்பெருமானுக்கு அற்புதமாகத்தக்கதல்லது வேறல்ல; ஆதலால், இதைக் கொண்டுபோய் வடபத்ரசாயியின் ஸந்நிதியில் செலுத்து வோம" என்று அந்தப் பெண்மணியைத் தமது உபயகராம் புஜங்களாலும் மெல்லெனத் தாங்கிக்கொண்டு, உள்ளங் களிக்கவும் உடல் புளகிக்கவும் போய் ஸந்நிதியில் நின்று, "எம்பெருமானே! இந்தப் பிரகாச மயமான பெண்ணமுத மாகிய அரும்பொருள் தேவரீர்க்கு உரித்தாகத்தக்கதன்றி மற்றவர்க்கு உரித்தாகத்தக்கதல்ல. ஆதலால், இப் பெண் மணியைத் தேவரீர் அங்கீகரித்தருள வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

எம்பெருமான் அசரீரியாக "இந்தப் பெண்மகவைக் கோதை யென்று பெயரிட்டு உமது புத்திரியாகக்கொண்டு வளர்த்து வாரும்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

அந்த ஸ்தலத்தி லுள்ளவர்க்கு "இந்தப் பெண்குழந் தையை இரத்தின சிவிகையின்மேல் ஏற்றிப் பல உபசாரங்க

ளுடன் போய் விஷ்ணுசித்தரது திருமாளிகையில் விடுத்து வாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

ஸ்ரீ வைஷ்ணவர்களெல்லோரும் மனங்களித்து, அந்தப் பெண் அரசை ஒரு ரத்நகசிதமாகிய பொற்சிவிகையில் வைத்து, சத்ர சாமராதி அலங்காரங்களுடன் மங்கள வாத்யங்கள் முழங்க, பலவித வுபசாரங்களுடன் அத் தலத்தை வலமாகக் கொண்டுபோய், பெரியாழ்வாரது அஷ்ட மங்கலங்களு நிறைந்த திருமாளிகையில் விடுத்தார்கள்.

பின்பு, விஷ்ணுசித்தர் மனங் களித்து, பகவதனுக்கிரகத்தால் கிடைத்த புத்ரியைப் புனிதமான வாசனை கலந்த நீரினுல் மஞ்சனஞ் செய்வித்து பரிமளம் ஏற்றிய மிருதுவான வாடையால் திருமேனி கயங்காமல் மெல்லென வொற்றிப், புரையறச் செறிந்து நெறிந்து மெல்லென்று நெய்த்து இருண்ட மயிர்க்கற்றையைக் கோதிச் சிக்கறுத்து ஏலச் சாந்தணிந்து - சூழியமுடித்துச் - சுட்டி தூக்கிச் - சில் முதலிய அணிகளிட்டுப் பின்னல் செய்தும், இளம்பிறை போன்ற ஒளி பொருந்திய நெற்றியினிடத்து இலம்பகம் திருவுத்தி முதலிய அணியணிந்து - மூன்றும்பிறைபோல் விளங்கிச் சிறுகித்தோன்றத் திருமண்ணிட்டு - இடையில் ஸ்வர்ணரேகைபோலப் பிரகாசிக்க ஸ்ரீசூர்ணமிட்டும், வள்ளைத்தண்டை யொத்த அழகிய காதுகளில் பொன்னோலை முதலிய ஆபரணங்களை யணிந்தும், எள்ளின் பூவையொத்து விளங்குகின்ற நாஸியினிடத்து முத்தணிகள் அணிந்தும், காதளவு நீண்டு கருநெய்தற்போன்று கருணை துளும்புகின்ற கண்களில் அஞ்சனந் தீட்டியும், கமுகையொத்து அழகு பொங்குகின்ற கழுத்தினிடத்து முத்துமாலை - நவமணிமாலை - பொன்மாலை - பவளமாலை - கட்டுவடம் - பட்டடை முதலிய அணிகளணிந்தும், பசிய வேய்போன்ற தோள்களினிடத்

துச் சூடகம் - தோட்சரி - தோள்வளை முதலிய அணிக ளணிந்தும், தாமரைமலர்போன்ற முன்கையினிடத்து இரத்ந கடகம் - பொன்வளை முதலிய பணிதியணிந்தும், காந்தண் மலர்போன்ற மெல்லிய விரல்களினிடத்து ரத்நகசிதமாகிய பொன்னாழி யிட்டும், துடிபோன்ற இடையில் விலையுயர்ந்த ஸ்வர்ணமயமாகிய சிற்றுடையுடுத்தி அதன்மேல் கலைமுதலிய அணிகள் அணிந்தும், செந்தாமரை மலர்போன்ற சிற்றடி யில் செம்பஞ்சூட்டிப் பொற்சிலம்பு - பொற்றண்டை - பொற்பாடகம் முதலிய அணிக ளணிந்தும், இவ்வாறு பல வகையான அலங்காரங்களைச் செய்து 'மணமுள்ள மல்லி கைக் கொடியை வளர்ப்பதுபோல்' செல்வம் பெருகச் சீராட்டி வளர்த்துவர, இளம்பிறைக் கொழுந்துபோல் வளர்ந்துவருகின்ற கோதையார் அப் பருவத்திற்றானே ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளில் பக்திவைத்து, தமது தகப்பனாராகிய பெரியாழ்வார் எம்பெருமான் விஷயத்தில் செய்துவருகின்ற கைங்கர்யங்களைத் தாமும் செய்யவேண்டு மென்கின்ற ஆஸக்தியுடையவராய்ப், பிரதிதினமும் பெரி யாழ்வாருடன் நந்தவனத்துக்குச் சென்று பூஞ்செடிகட்குத் தண்ணீர்மாறியும், புஷ்பங்களெடுத்தும், தந்தையாகிய விஷ்ணுசித்தர் அதிசயிக்கும்படி வேறு விளையாட்டு ஒன்று மின்றி இவையே விளையாட்டாகக் கொண்டும், ஸ்ரீமந் நாராயணனது திருநாமங்களை அடிக்கடி வாயினாற் சொல்லி யும் திருமந்த்ரத்தை ஜபித்தும், எம்பெருமான் திருவடியை நினைந்து 'நெருப்பிலிட்டநெய்போல்' நெஞ்சம் நெகிழ்ந் துருகியும், கண்களில் ஆநந்தபாஷ்பங்களைச் சொரிந்தும், அந் நகரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர் முதலிய யாவரும் ஆச்சர்ய மடையத்தக்க ஸத்காரியங்களைச் செய்துகொண்டு மிருந்தார்.

இவ்வாறிருந்த கோதையார் மங்கைப்பருவத்தை யுடையவராய்ப் பிதாவின் பிறகு நந்தவனத்துக்குப்போகின்றதை யொழிந்து திருமாளிகையினிடத்தே யிடைவிடாது எம்பெருமான் திருவடிகளை நினைந்துகொண்டு இருக்கின்ற நாள்களில் ஒருநாள் பெரியாழ்வார் நந்தவனத்திலிருந்து கொண்டு வந்த புஷ்பங்களை யெல்லாம் பலவகைப்பட்ட திருமாலைகளாகத் தொடுத்துத், திருப்பூக்கூடையை யெடுத்து அதிலுள்ள ஓர்வகை மாலையைத் தூக்கி அதனிடத்திலுள்ள பரிமள விசேஷத்தை ஆக்ராணித்து வியப்படைந்து, அதைத் தமது அளகபாரத்தில் சூட்டிக்கொண்டு கண்ணாடியில் அழகுபார்த்து, 'இது எம்பெருமானுக்கு உசிதமான மாலை' என்று நினைத்துத், தந்தையார் திரும்பி வருவதற்குள் அதனைக் களைந்து முன்போலவே அத் திருப்பூக்கூடையில் வைத்து முன்னிருந்த விடத்தில் தூக்கிவிட்டார்.

ஆழ்வார் எழுந்தருளி அத் திருப்பூக்கூடையை யெடுத்துக் கொண்டுபோய்ப் புஷ்பமாலைகளையெல்லாம் வடபெருங் கோயிலானுக்கு ஸமர்ப்பித்து, தீர்த்தமும் ப்ரஸாதமும் வாங்கிக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருளினார். அன்றைய தினம் சாத்திய புஷ்ப மாலைகளில் தெய்வத்தன்மையுள்ள பரிமளம் நெடுந்தூரமட்டும் வீசுவதை அந்தஸ்தலத்திலுள்ள அர்ச்சகர் முதலானவர்கள் அறிந்து வியப்படைந்தார்கள். எம்பெருமானும் திருவுள முவந்தருளினார்.

இந்தப்பிரகாரம் நெடுங்காலம் கோதையார் சூட்டிச் சூட்டி அழகுபார்த்துக் களைந்துவைத்துவர ஆழ்வாரும் அதை யறியாமல் வடபத்ரசாயிக்குப் ப்ரதிதினமும் ஸமர்ப்பித்துக்கொண்டு வருகின்ற நாள்களில் ஒரு நாள் ஸ்ரீமந் நாராயணன் பூப்பிராட்டியார் கோதையாக அவதரிததுத்

தமது கைங்கர்யங்களைச் செய்கின்றதையும் அவரது பக்தி விசேஷத்தையும் எல்லோர்க்கும் அறிவிக்கும்படி திருவுள்ளங்கொண்டருளியபடி பெரியாழ்வார் புஷ்பமாலைகளை ஒவ்வொன்ருக எடுத்து அர்ச்சகர் கையில் கொடுக்க, அவர் அதைவாங்கி வடபத்ரசாயிக்குச் சாத்தும்போது ஒருமாலையில் மயிரொன்றிருக்கக் கண்டு, மனஸ்தாபமடைந்து, ஆழ்வாரைப் பார்த்து, "ஸ்வாமி! இஃதென்ன அபசாரம்; திருமாலையில் மயிர்ச்சிக்குண்டிருக்கின்றதே; எம்பெருமான் திருமேனிக்கு எப்படிச் சமர்ப்பிக்கப்படும்? தேவரீர் செய்து வருகின்ற கைங்கர்யங்களிலே இப்படிப்பட்ட அசுத்தம் நேரிடுமானல் மற்றவர்கள் செய்கின்றதில் என்ன நேரிடாது? இது விஷயத்தில் தேவரீர் திருவடிகளில் அபசாரப்பட்டவனுனும் ஆகின்றேன்; இம் மாலைகளை இனி ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கமாட்டேன்" என்றுகூறி, அவற்றைக் கீழே வைத்துவிட்டார்.

ஆழ்வாரும் அதுகண்டு அதிக பயமும் துக்கமும் நடுக்கமும் அடைந்து, அர்ச்சகரை நோக்கி, "ஸ்வாமி! இந்த அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும்" என்று சொல்லி, அந்த க்ஷணமே நந்தவனத்திற்குச் சென்று புஷ்பங்களைத் தேடித்தேடிக்கொய்து மாலைகள் கட்டிக்கொண்டு விரைவாக வந்து அர்ச்சகர்கையிற் கொடுத்து, "ஸ்வாமி! இதனைச் சாத்தும்" என்று பிரார்த்திக்க, அர்ச்சகரும் அதை வாங்கிச் சமர்ப்பித்து, ஆழ்வாரை நோக்கி, "ஸ்வாமி! சிலநாளாகத் தேவரீர் கொண்டுவருகிற மாலைகள் அதிக பரிமளம் வீசியும் வாடியதுபோல் இருந்தது; அதை வெளியிடுதற்கு அஞ்சிச் சந்தேகத்தோடே சாத்தி வந்தேன்; இன்றையதினம் அதனேடு மயிருமிருந்தது; இப்படி யிருக்கவேண்டியதென்ன? இதை நன்ருகக் கண்டறிய வேண்டும்" என்று சொன்னர்.

ஆழ்வார் அதுகேட்டுக் கிலேசத்துடனே, "ஸ்வாமி! என் புத்தி பூர்வகமாக அணுவளவும் அபசாரமுண்டாகக் கைங்கர்யங்களை நடத்தினவன்று; இன்று ஏதோ எம்பெருமான் லீலையாகத் தோன்றுகின்றது; இதற்கென்ன செய்வேன்?" என்று மனம்நொந்து நொந்து உரைத்து விடைபெற்றுத் திருமாளிகைக் கெழுந்தருளி, அன்றிராத்திரி அடங்காத் துயரத்தோடு சயனித்து, நித்திரையுங் கொள்ளாது "ஐயோ! இப்படிப்பட்ட அபசாரம் நேரிட்டதற்குக் காரணம் ஏதுவோ?" என்று எண்ணியெண்ணி, 'நாம் தினந்தோறும் திருப்பூக்கூடையைத் தூக்கிவைத்துவிட்டு நந்தவன கைங்கர்யத்தைக் குறித்துப் போகின்றோமே; நாம் வருவதற்குள் ஏதாகிலும் ஓர் குற்றம் நேரிட்டிருந்தாலு மிருக்கும்' என்று ஒருவாறு துணிந்து அருணோதயமானவுடன் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்து, நியதியின்படி நந்தவனத்திற்குச் சென்று, அதிக ஜாக்கிரதையாகப் புஷ்பங்களைக் கொய்துவந்து மாலைகள் தொடுத்து திருப்பூக்கூடையில் வைத்து, ஓரிடத்தில் தூக்கி, மற்றோரிடத்தில் மறைவாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அப்பொழுது கோதையார் தமது வழக்கப்படி அத்திருப்பூக்கூடையை யெடுத்து அதிலுள்ள மாலைகளைத் தனது அளகத்தில் சூட்டிக்கொண்டு அழகுபார்க்கிற ஸமயத்தில், பெரியாழ்வார் கண்டு அதிககோபிஷ்டராய் வர, கோதையார் கண்டு பயந்து சூட்டின புஷ்ப மாலைகளைக் களைந்து திருப்பூக்கூடையில் வைத்துவிட்டுக் கண்களில் முத்துமுத்தாக நீர் பெருகச் சோர்ந்த முகத்தோடு நின்றார்.

ஆழ்வார் அதுகண்டு "அம்மா! என்னகாரியஞ் செய்தாய்? எம்பெருமான் விஷயத்தில் ஸ்வப்பனத்திலும் அபசாரம் செய்யக்கூடாதென்று அறிந்த உனக்கு இப்படிப்பட்ட

தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (அ)

(ப - ரை.) கீழ் - கீழ்த்திக்கில், வானம் - ஆகாயம், வெள்ளென்று - வெளுத்ததென்று, எருமை - மஹிஷங்கள், சிறுவீடு - சிறிது விடுதலாய், மேய்வான் - (பனிப்புல்லை) மேயும்பொருட்டு, பரந்தனகாண் - ஸ்வேச்சையாக வனங்களிலே வர்த்தித்தது; மிக்குள்ள - உன்னை யொழிந்த், பிள்ளைகளும் - பெண்பிள்ளைகளும், போவான் - போகிறதற்காக, போகின்றாரை - போகின்றவர்களை, போகாமல் - போகாதபடிக்கு, காத்து - தடுத்து, உன்னைக் கூவுவான் - உன்னை அழைக்கவேண்டி, வந்து - நாங்களே வந்து, நின்றோம் - வாசலிலே நிற்கிறோம், கோதுகுலமுடைய - களனூஹலடைய, பாவாய் - பெண்பிள்ளாய், எழுந்திராய் - எழுந்திரு; பாடி - ஸ்ரீ க்ருஷ்ணன் கல்யாண குணங்களை யநுசந்தித்து, பறை - வாத்ய விசேஷத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, மா - குதிரை வடிவுகொண்டு வந்த கேஸி என்பவனது, வாய் - வாயை, பிளந்தானை - இருபிளவாகக்கீண்டவனை, மல்லரை - சாணூராதி மல்லர்களை, மாட்டிய - ஸம்ஹரித்த, தேவாதிதேவனை - தேவர்களுக்குத் தேவனானவனை, சென்று - சந்நிக்குச் சேர்ந்து, நாம் - நாமெல்லாரும், சேவித்தால் - ப்ரபத்தி பண்ணினால், ஆவாவென்று - ஐயோ ஐயோ வென்று, ஆராய்ந்து - விசாரித்து, அருள் - க்ருபை பண்ணுவான்; எல் ஓர் - தகுத்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கிழக்கு வெளுத்தது எருமைகள் பனிப்புல்மேயவய லெங்கும் பரந்தன; ஆயர்பாடியில் பெண்பிள்ளைகள் நீராடப் போகப் போனவர்களைத் தடுத்து உன்னை அழைத்துப் போகவந்தோம்; 'நாம்' நோன்புக்காகச் சென்று கண்ணனைச் சேவித்தால் அவன், நமக்கருள் செய்வன்; நீ அவசியம் வருவாயாக' வென்று, கண்ணனும் மதிக்கும்படி பெருமையுடையவள் ஒருத்தியை யெழுப்புகிறது.

மடைந்து, ஆழ்வார் திருமாளிகைக்கு வந்து, கோதையாரையும் ஆழ்வாரையும் பலவாறு துதித்து வணங்கினர்கள்.

ஆழ்வாரும் அளவிடப்படாத அதிசயமும் அன்புமுடையவராய்க் கோதையாரைத் தழுவியெடுத்து மடியில் வைத்து, உச்சி மோந்து, அவரது திருமுகத்தை நோக்கிக், "குருடன் கையில் விலையுயர்ந்த மாணிக்கம் கிடைத்ததுபோல நான் செய்த தவப்பயனால் பெறுதற்கரிய பேருகக் கிடைத்த உனது மஹத்வத்தைச் சிறிதும் அறியாமற் போனேனே" என்று இவ்வாறு பலவிதமாகத் துதித்து, அந்நாள் தொடங்கி எம்பெருமான் அருளியபடி கோதையார் சூட்டிக்கொடுத்த பூமாலைகளைக் கொண்டுபோய் வடபத்ரசாயிக்கு ஸமர்ப்பித்துக்கொண்டுவந்தார்.

கோதையாரும் ஸ்ரீமந் நாராயணனது நித்யவின்பங்களை யனுபவிக்கத்தக்க பருவமுடையவராய், 'எம்பெருமானுடன் கலந்து சுகானுபவஞ் செய்யும்வகை எவ்வகை?' என்று எண்ணி யெண்ணி மனம் உருகியும், நித்திரை நீங்கியும், திருமேனி வெதும்பியும், குழல்சோர்ந்தும், கைவளை நெகிழ்ந்தும், நெட்டுயிர்ப்பு வீங்கியும், ஒவ்வொருபோது ஸ்ரீமந்நாராயணனேடு தாம் பூர்வத்தில் அனுபவித்த அனுபவந் தோன்ற 'அனலிற்பட்ட மெழுகுபோல்' உள்ளங் கரைந்து கரைந்து மோஹித்தும், பிரிவாற்ருதவராய்த் தமது உயிர்ப்பாங்கிகளை நோக்கிப், "பெண்களே! எனது கண்மணி போன்றும், உயிர்க்குயிர் போன்றும், என் மனத்தில் அந்தரங்கமாக எழுந்தருளியிருக்கின்ற எனது பிராணநாயகனுகிய அழகிய மணவாளனை பஹிரங்கமாகக் கலந்து களிப்பதற்கு உபாயமொன்று சொல்வீர்களானல் நான் உயிர் தரித்து வாழ்வேன்" என்று குறையிரந்தும், பூர்வம் கோபிகாஸ்திரீகள் கண்ணபிரான் விஷயமாக நோன்பு நோற்றது

முதலிய ஸத்கர்மங்களைத் தாமும் அனுஷ்டித்து, அவை வெளிப்பட்ட திருப்பாவை முப்பதும், எம்பெருமான் தம்மை யணைவதற்கு உபாயஞ் செய்யவேண்டுமென்று மன்மதனை வேண்டி, அது தோன்ற தையொரு திங்கள் என்று பத்துப் பாடலும், சிற்றில் சிதைத்தல் - கன்னியரோடு விளையாடல் - கூடற் குறிப்பு - குயிற் பத்து - கனவு நிலையுரைத்தல் - பாஞ்சசன்யத்துடன் பகரல் - மேகத்தைத் தூது விடல் - திருமாலிருஞ்சோலைப் பெருமானை வழிபடல் - மால்செய் வகையொடு மாற்ற மியம்பல் - திருவரங்கத்துச் செல்வனைக் காமுறல்-ஸ்ரீதரனிருந்துழிச் செலுத்த வேண்டல்-அழகிய மணவாளன் அணிபொருள் கொண்டு அவலந் தீர்ப்பீரென்றல் - ப்ருந்தாவனத்துப் பரந்தாமனைக் கண்டது என்கிற இவைகளை யமைத்துத் தனித்தனி பத்துப் பத்துப் பாடலும் பாடியருளி, ஸ்ரீரங்கநாதனிடத்தில் அளவிறந்த காதல் கொண்டு இருந்தவர், ஒருநாள் பெரியாழ்வாரைப் பார்த்து, "அடியேன் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்க விரும்பினேன்" என்று கூறியருளினர்.

ஆழ்வாரும் அதை வடபெருங்கோயிலானுக்கு அறிவித்து அவரது ஆஞ்ஞைப்படி கோதையாரைப் பொற்சிவிகையில் ஏற்றிக்கொண்டு ஸ்ரீரங்கத்தைக்குறித்துத் தென்திருக்காவேரிக்கு ஸமீபத்தில் எழுந்தருளும்போது நாச்சியார் 'இதுதொட் டிறங்கி நடந்து போகவேண்டும்' என்று நினைத்தனர்.

எம்பெருமான் நாச்சியார் உள்ளத்தை யறிந்து 'நடந்தால் வருந்துவாள்' என்று தமதருளினால் அந்த க்ஷணமே ஒருவரும் அறியாதபடி ஸந்நிதிக்கு வருமாறு திருவுளங் கொண்டருள, நாச்சியாரும் அப்படியே ஸந்நிதிக்கு எழுக்

தருளி, அழகிய மணவாளனை ஸேவித்துத் திருமார்பில் வீற்றிருந்தார்.

சிவிகை எடுக்கின்றவர்கள் பாரந் தோன்றாமலிருப்பது அறிந்து அதிசயித்து, ஆழ்வாரிடத்து விண்ணப்பஞ் செய்தனர்.

ஆழ்வாரும் சிவிகையைத் திறந்து திகைப்படைந்து, அந்தக்ஷணமே விரைந்து ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிற் சென்று, கண்களில் நீர்வடிய நின்று, "எம்பெருமானே! எமது அரும் பொருளாகிய கோதையாரைத் தேவரீரே மாயஞ் செய்து மறைத்ததாகத் தோன்றுகின்றது: அவரைக் காட்டி அடியேனையும் ரக்ஷித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். எம்பெருமானும் ஆழ்வாரே! "உமது புத்திரியாரை இதோ பாரும்" என்று காட்டியருள, அதுகண்டு மகிழ்ந்து, "ஸ்வாமி! தேவரீர் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளிப் பரம பாகவதர் முதலிய பலருங் கண்டு களிப்படையக் கோதையாரைப் பாணிக்ரஹணம் பண்ணியருளவேண்டும்; அப்போது அந்த மணவாளக் கோலத்தை யடியேனுங் கண் குளிரக்கண்டு ஆநந்த மடையவேண்டும்" என்று பிரார்த்தித்து, சாஷ்டாங்கமாக ஸேவித்து நின்றார்.

அப்பொழுது அழகிய மணவாளனாகிய எம்பெருமான் ஆழ்வாரைக் கடாக்ஷித்து, "உமது இஷ்டப்படியே பங்குனி யுத்திரத்தில் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருகிறோம்; நீர் கோதையாருடன் முன்னதாகப்போம்" என்று ஆஜ்ஞாபிக்க, விடைபெற்றுப் பொற்சிவிகையில் கோதையை யெழுந்தருளப்பண்ணித் தாமும் வேறு சிவிகையில் எழுந்தருளி, அநேக ஸம்பிரமங்களுடன் இடையிலுள்ள திவ்ய தேசங்களி லெழுந்தருளிய எம்பெருமானை அடிபணிந்து, ஸ்ரீவில்லிபுத்தூரை

அடைந்து, அந் நகரிலுள்ளவர்கள் எதிர்கொள்ள வடபத்ர சாயியின் ஸந்நிதிக்கெழுந்தருளி, எம்பெருமானை ஸேவித்துத் தமது திருமாளிகைக்கு எழுந்தருளினர்.

பின்பு, அழகிய மணவாளர் பங்குனி யுத்திரத்தில் கோதையாரைப் பாணிக்ரஹணஞ் செய்துகொள்ள எழுந்தருளுவதான சுபச்செய்தியை அந் நகரத்திலுள்ள பலர்க்கும் அறிவிக்க, அனைவரும் கேட்டு மகிழ்ந்து ஆழ்வார் திருமாளிகைக்கு வந்து, கோதையாரையும் ஆழ்வாரையும் பலமுறை ஸேவித்து, ஸ்தோத்திரஞ் செய்து, "எங்களது ஊனமாகிய கண்களினல் பிரமாதி தேவர்களுக்கும் கிடைத்தற்கு அருமையாகிய ஸ்ரீமந் நாராயணனது மணவாளக் கோலத்தை ஸேவித்துக் கிருதார்த்தர்களாகும்படி செய்யும் உதவிக்கு என்ன பிரதியுபகாரம் செய்வோம்?" என்று நானா விதமாக உவந்து விடைபெற்றுத் தங்கள் தங்கள் கிருகத்திற் சென்று தங்கள் தங்கள் வீதிகளில் முத்துப்பந்தல் - மலர்ப் பந்தல் - சித்திரப்பந்தல் - சித்திரக்கொடி - துகிற்கொடி - மகரதோரணம் முதலாகிய அலங்காரங்களைச் செய்து, மாளிகை முகப்புகள் தோறும் ரத்நமாலை, மலர்மாலை முதலிய மாலைகளைத் தூக்கி, வாழை, கமுகு முதலியவைகளை நாட்டி, பூரணகலசங்கள் - முகவிளக்குகள் - கண்ணாடிகள் முதலிய அஷ்டமங்கலங்களை நிரப்பித் தாங்கள் தாங்களும் ஆடையாபரணம் முதலிய அலங்காரங்களைச் செய்துகொண்டும், ப்ராஹ்மண போஜனம் முதலிய கருமங்களைச் செய்துகொண்டும், "பங்குனியுத்திரம் எப்போது வரும்?" என்று எதிர்பார்த்திருந்தார்கள்.

இவ்வாறிருக்க, எம்பெருமான் அருளியபடி பங்குனி யுத்திரத்தில் பெரியாழ்வார் தமது திருமாளிகையை அலங்

கரித்து, விவாகஞ் செய்தற்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் நிரப்பிப், பேரிகை, மத்தளம், தாளம் முதலிய மங்களவாத்தியங்கள் கோஷிக்கவும், நாடகக் கணிகையர் நடிக்கவும், கீதம் பாடவும் அழகிய மணவாளரை எதிர் நோக்கி யிருந்தார்.

பின்பு, ஸ்ரீமந் நாராயணன் ஆஞ்ஞைப்படி பிரமன் - ருத்திரன் - தேவேந்திரன் முதலான தேவர்களும், காந்தர் வர் - கிம்புருடர் - கின்னரர் - விஞ்சையர் - சித்தர் - முனி வர் - இருடியர் முதலான பதினெண் கணத்தாரும் ஸ்ரீவில்லி புத்தூரை அடைந்து, ஆழ்வாரது திருமாளிகையிற் சென்று, கோதையாரையும் ஆழ்வாரையும் வணங்கிப் பலவிதமாகப் புகழ்ந்து, தேவஸ்திரீகளால் கோதையாரை அலங்காரஞ் செய்வித்து, வடபத்ரசாயியின் கோயிலை அலங்கரித்து ஸேவித்திருந்தார்கள். இவ்வாறிருக்க கோதையார் அழகிய மணவாளனை இன்னும் எழுந்தருளக்கண்டேனில்லையே; என்செய்வேன்!" என்று மனமுருகி கருடாழ்வாரைக் குறித்து ஸ்தோத்திரஞ் செய்தருளினர்.

அவர் வந்து எதிர்நிற்க, "அவரை நோக்கி என்னுயிர்த் தலைவனுகிய ஸ்ரீரங்கநாதனை நீர் போய் அழைத்துவரவேண் டும்; அப்படிச் செய்தால் நாமும் அவரு மிருக்கின்ற ஆஸ னத்தில் நீரு மிருப்பீர்" என்று சொல்லியருளினர்.

அது கேட்டுத் "தாயே! இதோ அவ்வாறே செய் கின்றேன்" என்று அந்த க்ஷணமே ஸ்ரீரங்கத்திற்குப் போய், ஸ்வாமியை ஸேவித்து, "தேவரீர் இன்னும் அரைக்கணம் எழுந்தருளத் தாழ்ந்தால் கோதையார் உயிர் தரியார்" என்று விண்ணப்பஞ் செய்தருளினர்,

**

அதுகேட்டருளி எம்பெருமான் அக் கருடாழ்வார் தோள்களில் ஆரோகணித்துக்கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளினர்.

அதுகண்டு ப்ரஹ்மாதி தேவர்களும் மற்றவர்களும் ஆநந்த பரவசராய்த் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்தோத்திரஞ் செய்ய, ஸ்வாமியும் கருடனைவிட் டிறங்கி வடபெருங்கோயிலுக் கெழுந்தருளி, தேவேந்திரனைப் பார்த்து, "நீர் போய் பெரியாழ்வாரிடத்துப் பெண் பேசிவாரும்" என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

இந்திரனும் ஆழ்வார் திருமாளிகையிற் சென்று பெண் பேசிக் கலியாண மண்டபம் வந்து சேர்ந்தார்.

பெரியாழ்வார் கோதையாருடன் வந்து எம்பெருமானை அடிபணிந்து, "என் புத்திரியாகிய கோதையாரைத் தேவரீருக்குக் கொடுத்தேன்" என்று தாரை வார்த்து விவாகோத்ஸவத்துக்கு வேண்டிய சடங்குகளைப் பிரமாவைக்கொண்டு செய்விக்க, எம்பெருமானும் கோதையாருக்குத் திருமாங்கல்யதாரணம் செய்தருளினர்.

அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரி பெய்தும், முனிவர்கள் ஆசீர்வதித்தும் ஆநந்தபரவசத்தரா யிருந்தார்கள். திருக்கலியாணத்தை ஸேவித்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலிய பலரும் கண்களித்தும் மனமகிழ்ந்தும் ஆத்மலாபத்தை யடைந்தவர்களா யிருந்தார்கள்.

பிரமதேவன் மங்கள வாத்தியங்கள் முழங்கவும் சுமங்கலிகள் மங்களம் பாடவும், மற்றச் சடங்குகள் முழுதும் முடிக்க எம்பெருமான் நாச்சியாருடைய மெல்லிய கால்

மலர்களைத் தமது கைமலர்களால் மெல்லெனத் தூக்கி அம்மி மிதிப்பித்தும், அக்கினி வலம்வந்தும், அருந்ததி காண்பித்தும், உலகநடை யோங்கும் வண்ணம் அநுக்கிரஹஞ் செய்து, ஸகல ஸம்ப்ரமங்களுடன் வெள்ளையானையின்மேல் எழுந்தருளி ஊர்கோலம் வந்தருளித், திருக்கல்யாணத்தை ஸேவிக்க வந்த தேவர் - முனிவர்-பாகவதர் முதலிய யாவர்க்கும் அநுக்கிரஹஞ் செய்து, விடை கொடுத்தருளி, பெரியாழ்வாரை நோக்கி, " ஆழ்வாரே! நீர் நமது ஸ்ரீரங்கத்துக்கு வாரும் " என்று திருவாய் மலர்ந்தருளிச், சூடிக்கொடுத்த நாச்சியாராகிய கோதையாருடன் திருவரங்கம் பெரிய கோயிலுக் கெழுந்தருளினர்.

பின்பு, ஆழ்வாரும் வடபத்ரசாயியை ஸேவித்து, அங்கு நின்றும் புறப்பட்டுக் கூடலழகர், அழகராகிய இருவரையும் அடி பணிந்து, ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி, எம்பெருமான் ஸந்நிதியிற் சென்று தண்டன் ஸமர்ப்பித்துக் கைகுவித்து ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நிற்க, அழகிய மணவாளன், பெரியாழ்வாரை நோக்கி, " நீர் இவ்விடத்தில் ஒரு கோயில் கட்டி, ஓர் ஆஸனத்தில் நம்மையும் கோதையையும் கருடனையும் எழுந்தருளப்பண்ணி ஆராதனஞ் செய்துகொண்டிரும் " என்று ஆஞ்ஞாபித்தருளினர்.

அந்தப்படியே கட்டுவித்து, அதில் எம்பெருமான் முதலாக மூவரையும் எழுந்தருளப் பண்ணித், திருவாராதனஞ் செய்துகொண்டு அநேககால மிருந்து, பின்பு, சூடிக்கொடுத்த நாச்சியார் முன்னிலையாகத் திருமந்த்ரத்தையோதி ஸ்ரீமந் நாராயணனது திருவடிகளை யடைந்தார்.

ஆண்டாள் வைபவம் முற்றுப்பெற்றது.

ஆண்டாள் மங்களாசாஸனம் செய்தருளிய

திவ்வியதேசங்கள்

1. திருவரங்கம் பெரியகோயில்
2. திருக்கண்ணபுரம்
3. திருமாலிருஞ்சோலைமலை
4. ஸ்ரீ வில்லிபுத்தூர்
5. திருவேங்கடம் (திருப்பதி)
6. திருவடமதுரை
7. திருத்துவாரகை
8. திருவாய்ப்பாடி
9. திருப்பாற்கடல்

வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தவை

நேரிசை வெண்பா

கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணி மாடங்கள் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோனூர்.

பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும்—கோதை தமிழ்
ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

["ஸ்ரீமந் நாராயணன் திருவாய்ப்பாடியிலே கண்ணனாகத் திருவவதரித்த காலத்தில் இடைப்பெண்களுக்கும் கண்ணனுக்கும் கண்ணோட்ட முண்டாகாதபடி இடையர்கள் பெண்களை நிலவறை களிலே காவலிட்டு வைக்க, பெண்களது மனோரதத்தினாலும் இதை அடியொத்தின கண்ணன் ஸங்கற்பத்தினாலும் மழையின்றிக்கே யொழிய கோதனரான இடையர் பெண்களை நோன்பு' நோற்கச் சொல்லி கண்ணனைக்கூட இருந்து நோன்பை நிறைவேற்றி வைக்கும்படி வேண்டிக்கொண்டு பெண்களை அவன்கையிலே காட்டிக் கொடுக்க, இடைப்பெண்களும் மார்கழி நீராட்டமென்னும் அந் நோன்பின் முகமாகக் கண்ணனோடு கலந்து பரிமாறி மனோரத பூர்த்தியடைந்தார்கள்" என்னும் விருத்தாந்தத்தைக் கேட்டறிந்த ஆண்டாள், இடைப்பெண்களை அனுகரித்துக்கொண்டு அருளிச் செய்தது இத் திருப்பாவைப் பிரபந்தம்.]

பராசரபட்டர் அருளிச் செய்தது

நீளாதுங்க ஸ்தநகிரிதடீ ஸுப்த முத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம்ஸ்ருதிசத சிரஸ்ஸித்த மத்யாபயந்தீ

ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜிநிகளிதம் யாபலாத்க்ருத்யபுங்க்தே
கோதாதஸ்யை நமஇதமிதம் பூயஏவாஸ்து பூய:

(பதவுரை) நீளா - நீளாதேவியின் அம்சபூதையான நப்பின்னை பிராட்டியுடைய, துங்க - உயர்ந்த, ஸ்தந - ஸ்தநங்களாகிற, கிரி - பர்வதங்களின், தடி - ப்ரதேசவிசேஷத்தில், ஸுப்தம் - நித்திரைபண்ணுகிற, க்ருஷ்ணம் - க்ருஷ்ணனை, உத்போத்ய - திருப்பள்ளியுணர்த்தி, ஸ்வம் - ஸ்வத:ப்ரமாணமான, ஸ்ருதி ஸத - வேதஸஹஸ்ரங்களின், விர: - விரஸ்வில், வித்தம் - வித்தமாயிருக்கிற, பாரார்த்யம் - விசேஷார்த்தங்களை, அத்யாபயந்தீ - அத்தியயநம் பண்ணிவித்தவளாய், உச்சிஷ்டாயாம் - சேஷம் செய்யப்பட்ட, ஸ்ரஜி - திருமாலையில், நிகளிதம் - பத்தநான, க்ருஷ்ணம் - கண்ணனை, பாலாத்க்ருத்ய - ஸ்வாதவ்ருத்திபண்ணி, யா - யாதொருப்ராவித்தியுடைய, கோதா - கோதைநாயகி, புங்க்தே - உண்ணுஞ் சோறுதியகா புஜித்தாளோ, தஸ்யை - அந்தக் கோதைநாயகியின்பொருட்டு, இதம் இதம் - இந்த இந்த, நம: - மங்களம், பூய: ஏவ - பின்பு அப்படியே, அஸ்து - ஆகக்கடவது, பூய: - பின்பும், அஸ்து - ஆகக்கடவது.

உய்யக்கொண்டார் அருளிச் செய்தது

அன்ன வயல்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

(ப - ரை.) அன்னம் - ஹம்ஸங்களால் நெருங்கிய, வயல் - கழனிகளாற் சூழப்பட்ட, புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகையான, ஆண்டாள் - கோதைநாயகி, அரங்கற்கு - ரங்காத்யக்ஷனுக்கு, பன்னு - ஆராய்ந்தருளிச்செய்த, திருப்பாவை - திருப்பாவையாகிய இந்தத் திவ்யப்ரபந்தத்தை, பல் - பல, பதிகம் - பத்துக்களாக, பன்னு - செய்து, இன் - இனிய, இசையால் - ஸாமகாநத்தால், நல் - விலக்ஷணமான, பாமாலைபாடி - தமிழ் மாலை

யாகப்பாடி அநுஸந்தித்து, கொடுத்தாள் - ஸமர்ப்பித்தவளை, பூமாலை - திருமாலையை, சூடி - அணிந்து, கொடுத்தாளை - ஸமர்பித்தவளை, சொல் - துதிப்பாயாக.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற்கென்னை விதியென்றவிம்மாற்றம்
நாம்கடவா வண்ணமே நல்கு.

(ப - ரை.) சூடி - புஷ்பமாலைகளை அணிந்து, கொடுத்த - ஸமர்ப்பித்த, சுடர் - உஜ்வலமான, கொடியே - கொடிபோல்பவளே, தொல் - அநாதியான, பாவை - திருப்பாவையை, பாடி - திவ்யகானத்தார் பாடி, அருள - க்ருபைபண்ண, வல்ல - ஸமர்த்தையான, பல் - பலவகைப்பட்ட, வளையாய் - கங்கண விசேஷாபரணங்களை யுடையவளே, நீ - தேவரீர், நாடி - உத்தேசித்து, வேங்கடவற்கு - திருவேங்கடத்தானுக்கு, என்னை - அடியேனை, விதி - விதிக்கவேணும், என்ற - என்று பிரார்த்தித்த, இம் - இத்தன்மையான, மாற்றம் - திவ்யசூக்தியை, நாம் - அஸ்மதாதிகள், கடவா - அதிக்ரமிக்காத, வண்ணமே - உபாயத்தையே, நல்கு - க்ருபைபண்ணும்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர்புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். (க)

(ப - ரை.) மார்கழி - மார்கழி யென்கிற, திங்கள் - மாசத்தில், மதி - சந்திரனுல், நிறைந்த - ஸம்பூர்ணமான, நல்ல தினத்தில், நீராட - தீர்த்தமாடுகிறதற்கு, போதுவீர் - வருகிறவர்கள்,

போதுமின் - வாருங்கோள்; நேர் - விலக்ஷணமான, இழையீர் - ஆபரணங்களையுடைய, சீர் - சம்பத்தினால், மல்கும் - பரிபூரண மான, ஆய்ப்பாடி - திருவாய்ப்பாடியில், செல்வம் - சம்பத்தை யுடைய, சிறுமீர்காள் - சிறுபெண்களே, கூர் - கூர்மையான- வேல் - வேலாயுதத்தையுடைய, கொடும் - க்ரூரமான, தொழிலன்- வ்யாபாரமுடைய, நந்தகோபன் - நந்தகோபாலனுடைய, குமரன், குமாரனானவனும், ஏர் - ஸௌந்தர்யத்தினால், ஆர்ந்த - ஸம்பூர்ண மான, கண்ணி - நேத்ரங்களையுடைய, எசோதை - எசோதைப் பிராட்டிக்கு, இளஞ்சிங்கம் - இளஞ்சிங்கமானவனும், கார் - மேகத் தைப்போன்ற, மேனி - திருமேனியை யுடையவனும், செங் கண் - புண்டரீகாக்ஷனும், கதிர் - சூர்யனையும், மதியம் - சந்திரனை யும், போல் - ஒத்த, முகத்தான் - திருமுகமண்டலத்தை யுடைய வனுமான, நாராயணனே - ஸர்வஸ்வாமியானவனே, நமக்கே - வ்ரதோபவாஸிகளான நமக்கே, பறை - வாத்ய விசேஷங்களை, தருவான் - ப்ரஸாதிப்பான், பாரோர் - லோகத்தார், புகழ் - கீர்த் திக்கும்படியாக, படிந்து - பொருந்தி, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நம் நோன்புக்கேற்க மாதம் மார்கழி மாதமாய் பக்ஷமும் சுக்லபக்ஷமாய் வாய்த்தபடி பாருங்கோள்! நம் அபிமுக் யத்தோடு சென்று பற்றினால் நம் கண்ணன் நமது நோன்பை முடித்து வைப்பன். ஆகையால் ஊரார் புகழும்படி நோன்புக்காக மார்கழி நீராட மனமுடைய தோழிமார் எல்லாரும் வாருங்கள் என்றழைக்கிறது.

வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாடற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்

ஐயமும் பிச்சையு மாந்தனையுங் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (உ)

(ப - ரை.) வையத்து - பூமியில், வாழ்வீர்காள் - ஸௌபாக்கிய பாக்கியவதிகளே, நாமும் - நாங்களும், நம் - எங்களுடைய, பாவைக்கு - நோன்புக்கு, செய்யும் - செய்யத்தக்க, கிரிசைகள் - க்ருத்யங்களை, கேளீரோ - கேளுங்கோள்: பாற்கடலுள் - க்ஷீர சமுத்ரத்தில், பையதுயின்ற - லகுநித்ரைபண்ணுகிற, பரமன் - ஸர்வாதிகனான ஸ்ரீயஃபதியினுடைய, அடி - திருவடிகளை, பாடி - அநுஸந்தித்து, நெய் உண்ணோம் - நெய்யைத் தின்னமாட்டோம், பால் உண்ணோம் - பாலைக் குடிக்கமாட்டோம்; நாட்காலே - அத்யந்த ப்ராதக்காலத்திலே, நீராடி - தீர்த்தமாடி, மையிட்டெழுதோம் - மையிடக்கடவர்களல்லோம், மலரிட்டுநாம் முடியோம் - புஷ்பத்தைச் சூடிக்கொள்ளக் கடவர்களல்லோம்; செய்யாதன - செய்யத்தகாத காரியங்களை, செய்யோம் (யாம்) - செய்வதில்லை; தீக்குறளை - பொல்லாதவார்த்தைகளை, சென்றோதோம் - ஒருவரிடத்துச் சென்று காதில் உரையோம்; ஐயமும் - உபகாரமும், பிச்சையும் - இரப்பவர்களுக்கு உணவும், ஆந்தனையும் - ஆகுமளவும், கைகாட்டி - கொடுத்து, உய்யும் ஆறு - உஜ்ஜீவநப்ரகாரத்தை, எண்ணி - அநுஸந்தித்து, உகந்து - ஸந்தோஷிக்கும்படியாக, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணன் வந்து பிறந்திருக்கும் பூமியில் பிறந்த பாக்கியசாலிகளே! யாம் ஸ்வஸ்தத்தமாய் நெய் பால் உண்பதையும் நாமாகவே மையிட்டுக் கொள்வதையும் பூமுடித்துக் கொள்வதையும் தவிர்ந்து அகிருத்தியங்களைச் செய்யாமலும் கோட் சொல்லாமலும் நமக்குக் கூடும் வரையில் பரோபகாரம் செய்து கொண்டும் இருந்து நாம் பிழைக்கும்படி உவப்போடே க்ஷீராப்தி நாதனைப் பாடக்கடவோம்; இதுவே நோன்புக்காக நாம் வைத்துக் கொள்ள வேண்டிய நியமம் என்கிறது.

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினல்
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெறுஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்கு வளைப்போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (௩)

(ப - ரை.) ஓங்கி - வளர்ந்து, உலகு - லோகங்களை, அளந்த - அளவிட்ட, உத்தமன் - உத்தமனுடைய, பேர் - திருநாமத்தை, பாடி - அநுஸந்தித்து, நாங்கள் - நாங்களும், நம் - நம்முடைய, பாவைக்கு - நோன்புக்கு, சாத்தி - ஒருப்பட்டு நீராடினல் - தீர்த்த மாடினல், தீங்கின்றி - அநாவ்ருஷ்டி தோஷமில்லாமல், நாடெல் லாம் - ஸமஸ்ததேசங்களும், திங்கள் - மாசத்துக்கு, மும்மாரி - மூன்றுமழை, பெய்து - வர்ஷித்து, ஓங்கு - வளர்ந்த பெருஞ்செந் நெல் - பருமனுன நல்ல சம்பா நெற்பயிரின், ஊடு - நடுவே, கயல் - சேல்கெண்டைகள், உகள - குதித்து விளையாட, பூங்குவளைப் போதில் - விகஸிதமான நெய்தல் புஷ்பங்களில், பொறிவண்டு - புகரையுடைய வண்டுகள், கண்படுப்ப - நித்ரிக்க, தேங்காதே - அசைவன்றிக்கே, புக்கு - ப்ரவேசித்து, இருந்து - பூமியிற் படிந் திருந்து, சீர்த்த முலை - கனமான மடிகளை, பற்றி - பிடித்து, வாங்க - மீட்க, குடம் - குடங்களை, நிறைக்கும் - பூரிக்கும், வள்ளல் - ஔதார்யத்தை யுடைய, பெரும் பசுக்கள் - ச்ரேஷ்ட மான பசுக்கள், நீங்காத செல்வம் - என்றும் விலகாத சீர்மை (சம்பத்து), நிறைந்து - ஸம்ருத்தமாம்படியாக, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) திரிவிக்கிரமனுய் அவதரித்து உலகையெல்லா மளந்தருளின ஸ்ரீமந் நாராயணனது திருநாமத்தைப் பாடிக் கொண்டு நாம் மார்கழி நீராடி நோன்பு நோற்போமாயின்,

மாதம் மும்மாரி பெய்து வயல்களில் பயிர்கள் செழித்து நீர்வளம் மிகுந்து பசுக்கள் குடங் குடமாகப் பால் கறக்கும்படி மதித்து இவ்வாறாகிய எல்லாச் செல்வமும் நீங்காது நிலைபெறுமென்று நோன்பினால் உண்டாகும் பயனைச் சொல்லுகிறது.

ஆழி மழைக்கண்ணா ஒன்றுநீ கைகரவேல்
   ஆழியுள் புக்கு முகந்து கொ டார்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
   பாழியந் தோளுடைப் பற்பநாபன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
   தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
   மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (௪)

(ப - ரை.) ஆழி - கம்பீரமான, மழை - வர்ஷத்துக்கு, கண்ணா - நிர்வாஹகனே, ஒன்றும் - அற்பமும், நீ - நீயும், கைகரவேல் - ஔதார்யம்தப்பாமல், ஆழியுள்புக்கு - ஸமுத்திரத்திலே ப்ரவேசித்து, முகந்துகொடு - ஜலபானம்பண்ணி, ஆர்த்து - கர்ஜித்து, ஏறி - ஆகாசமேறி, ஊழிமுதல்வன் - உகமுடிவிலுள்ள ஆதிக்கடவுள் திருமால், உருவம்போல் - திருமேனியைப்போலே, மெய் - உடம்பு, கறுத்து - கறுப்பாய், பாழி - கம்பீரமாய், அம் - சுந்தரமான, தோளுடை - தோள்களையுடையதான, பற்பநாபன் - பத்மநாபனுடைய, கையில் - ஸ்ரீஹஸ்தத்தில், ஆழிபோல் - திருவாழிபோல, மின்னி - ஒளிசெய்து, வலம்புரிபோல் - தக்ஷிணாவர்த்த ஸங்கம்போல், நின்று - சலியாமல் நின்று, அதிர்ந்து - கோஷித்து, தாழாதே - தாமதியாதே, சார்ங்கமுதைத்த - ஸ்ரீ சார்ங்கத்தினாலே பிறந்த, சரமழைபோல் - சரவர்ஷம்போல, உலகினில் - லோகத்தில், வாழ - வ்ருத்தியடையும்படியாக, நாங்களும் - நாங்களெல்லோரும், மகிழ்ந்து - ஸந்தோஷித்து, மார்கழி - மார்கழிமாசத்திலே, நீராட - தீர்த்தமாடும்படியாக, பெய்திடாய் - வர்ஷியாய், எல்ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

(நா - ம்.) மேகமே நீ, கடலின் நடுவில் புகுந்து வேண்டுமளவு நீர் முகந்து கொண்டு எம்பெருமான் போற் கறுத்த வுருவத்தோடு ஆகாய மெங்கும் பரவி, அவனது சக்கரம் போல் மின்னி, சங்கம் போல் ஒலித்து, அவன் வில்லிலிருந்து வரும் பாணம்போலே ஓயாத தாரையாக மழை பெய்யக் கடவாய், நாங்கள் மார்கழி நீராடு வதற்காக நீ செய்ய வேண்டியதிதுவே என்று பர்ஜன்ய தேவ லதக்குக் கட்டளை யிடுகிறது.

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
  தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
  தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
  வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவா நின்றனவும்
  தீயினிற் றூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (ரு)

(ப - ரை.) மாயனை - ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையனாய், மன்னு - பகவத்ஸம்பந்தம் நிலைபெற்ற, வடமதுரை மைந்தனை - த்வாரகைக்கு நிர்வாஹகனை, தூய - பரிசுத்தமான, பெருநீர்-ஏராள மான ஜலமுடைய, யமுனைத்துறைவனை - யமுனாதீரவாஸியான வனை, ஆயர் - யாதவர்களுடைய, குலத்தினில் - ஜாதியில், தோன் றும் - ப்ரகாசிக்கிற, அணிவிளக்கை - திருவாய்ப்பாடிக்கு மங்கள தீபத்தை, தாயை - அசோதைப்பிராட்டியுடைய, குடல் - கர்ப் பத்தை, விளக்கம்செய்த - ப்ரகாஸிப்பித்த, தாமோதரனை - கண்ண பிரானை, தூயோமாய் - பரிசுத்தராய், வந்து - விடைகொண்டு, நாம் - நாங்கள், தூயமலர்கள் - பரிசுத்தமான புஷ்பங்களை, தூய் - ஸமர்ப்பித்து, தொழுது - ஸேவித்து, வாயினால்பாடி - வாக்கினால் ஸ்தோத்ரம் பண்ணி, மனத்தினால் - மனஸ்ஸாலே, சிந்திக்க - த்யா னிக்க, போயபிழையும் - முன்செய்த தீவினையும், புகுதருவா நின் றனவும் - இனி நேரிடத்தக்க பாவங்களும், தீயினில் - நெருப்பிற்

பட்ட, தூசாகும் - பஞ்சுபோல் ஆய்விடும்; செப்பு - அவன் திரு நாமங்களை யநுஸந்திக்கும்படியாக, எல்லோர் - தகுந்த ஒப்பற்ற, எம் பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஆச்சர்ய சேஷ்டிதங்களை யுடையனாய் இடையர் குலத்தை மேன்மை பெறுவிக்கவந்து பிறந்த கண்ணனைக் கிட்டி பரிசுத்தமான மனத்தோடு நன்மலர்களைத் தூவி வாயார வாழ்த்தி கையாரத்தொழுது மனமாரத் தியானிக்கில் முன்வினைகளும் இனிவரும் வினைகளும் நெருப்பிற்பட்ட பஞ்சுபோலழிந்து விடுமென்று நோன்பின்பெருமை கூறுகிறது.

புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
  வெள்ளை விளிசங்கின் பேரரவங் கேட்டிலையோ
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
  கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவிற் றுயிலமர்ந்த வித்தினை
  உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள வெழுந்தரி இயென்ற பேரரவம்
  உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (சு)

(ப - ரை.) புள்ளும் - பக்ஷிகளும், சிலம்பினகாண் - கூவிப் போகா நின்றனகாண், புள்ளரையன் - பெரிய திருவடிக்கு ஸ்வாமி யானவனுடைய, கோயிலில் - கோயிலிலே, வெள்ளைவிளி - வெளுப்பாய் கோஷிக்கிற, சங்கின் - சங்கத்தினுடைய, பேரரவம் - மஹா கோஷத்தை, கேட்டிலையோ - கேட்க வில்லையோ? பிள்ளாய் - சிறுபெண்ணே, எழுந்திராய் - எழுந்திரு; பேய் - பூதனையினுடைய, முலை - ஸ்தநங்களில், நஞ்சு - விஷத்தை- உண்டு - அமுதுசெய்து, கள்ள - வஞ்சகனான, சகடம் - சகடாசுரனை, கலக்கு அழிய - சேர்க்கை நிலைகுலைய, காலோச்சி - ஸ்ரீபாதத்தாலே ஸ்பரிசித்து, வெள்ளத்து - க்ஷீரார்ணவத்திலே, அரவில் - திருவநந்தாழ்வான்மேலே, துயில் - யோக நித்திரையை, அமர்ந்த - விரும்பிய, வித்தினை - காரணபூதனை, உள்ளத்துக்

கொண்டு - பரிசுத்தாந்தக் கரணத்திற் கொண்டு, முனிவர்களும் - மானிலரும், யோகிகளும் - யோகாப்பியாசம் பண்ணுமவர்களும், மெள்ள எழுந்து - அசையாமல் நித்திரைவிட்டெழுந்து, அரி யென்ற - ஹரிஹரி என்கிற, பேரரவம் - மஹாகோஷங்கள், உள் ளம் - ஹ்ருதயங்களிலே, புகுந்து - ப்ரவேசித்து, குளிர்ந்து - குளி ரும்படி, எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இவ்வாறு நோன்பின் முறைகளைப் பேசியபின்பு எல்லோரும் அவரவர் மாளிகைகளில் போய்ப்படுத்தார்கள். பின் மாலைப்பொழுதில் எல்லோரும் கூடிச்சென்று கண்ணனை யெழுப்பி அழைத்துக்கொண்டு நீராடப்போக வேண்டுவதென்றும் முன்னே கண்விழித்தவர்கள் உறங்குகிறவர்களை யெழுப்பவேண்டுவ தென் றும் ஏற்பாடு செய்துகொண்டார்கள். அந்தப்படி ஒவ்வொருவராய் உணர்ந்தவர்கள் விடிந்தமைக்கடையாளங்களைச் சொல்லிக்கொண்டு உறங்குகிறவர்களை ஒவ்வொரு வகையாய் எழுப்புகிறார்கள்.

'பறவைகளுணர்ந்து கூவுகின்றன; ஸ்ரீமந் நாராயணனது சந்நிதியில் திருப்பள்ளியுணர்த்திக்காக வெண்சங்கம் ஊதுகிறார் கள்; தம்மனத்துடன் குடிகொண்ட வெம்பெருமானுக்கு பரிசிரமம் உண்டாகாதபடி மெதுவாக எழுந்து மஹரிஷிகள் அரி அரி என்று திருநாமஸ்மரணம் செய்கிறார்கள். நீ எழுந்திருப்பாயாக' என்று, பகவத் விஷயத்திற்கும் புதிதாயிருப்பவ ளொருத்தியை யெழுப்புகிறது.

கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத்தம் கலந்து
பேசின பேச்சரவம கேட்டிலையோ பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினல்
ஓசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவுநீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய் திறவேலோ ரெம்பாவாய். (எ)

(ப - ை.) கீசுகீசென்று - கீசுகீசு என்று, எங்கும் - ஸர்வ திக்குகளிலேயும், ஆனைச்சாத்தம் - பரத்வாஜபக்ஷிகள், கலந்து - ஸம்ஸ்லேஷித்து, பேசின - பேசிய, பேச்சு - வார்த்தைகளினுடைய, அரவம்-சப்தங்களை, கேட்டிலையோ-கேட்கவில்லையோ? பேய்ப்பெண்ணே-பேய்ப்பிள்ளாய், காசும் - அச்சுத்தாலியும், பிறப்பும் - ஆமைத்தாலியும், கலகலப்ப - கலகலவென்று சப்திக்க, கை பேர்த்து - கைகளைப் பேர்த்து, வாசம் - பரிமளத்தால், நறும் - பரிமளிக்கிற, குழல் - அளகபாரங்களையுடைய, ஆய்ச்சியர் - கோபிகாஸ்திரீகள், மத்தினால் - மத்தாலே, ஓசைபடுத்த - கடையப்பட்ட, தயிர் - தயிரின், அரவம் - கோஷம், கேட்டிலையோ - கேட்கவில்லையோ? நாயகம் - ஸ்வாமியான, பெண்பிள்ளாய் - பெண்பிள்ளை, நாராயணன்-ஸ்ரீயঃபதியினுடைய, மூர்த்தி - மூர்த்தியான, கேசவனை - கேஶிஹந்தாவான க்ருஷ்ணனை, பாடவும் - பாடிவரவும், நீ - நீதான், கேட்டே - கேட்டும், கிடத்தியோ - உறங்குகிறாயோ? தேசமுடையாய் - தெளிவையுடைத்தானவளாய், திற - (திருவாசல்) திறப்பாயாக; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) வலியன் குருவிகள் உணர்ந்து காலைக்கலவிகலந்து கீச்சுக்கீச்சென்று கூவுகின்றன; ஆய்ச்சிமார் (தங்கள்) ஆபரணங்கள் ஒலிக்கும்படி தயிர் கடைகிறார்கள் ; நாங்கள் இங்கு நின்று நாராயணனைப் பாடிக்கொண்டிருக்கவும் நீ உறங்குவதேன்? எழுந்து வந்து கதவைத் திறவா யென்று, பகவத் விஷயத்தில் பழகியிருந்து புதுமை பாவித்திருப்பா ளொருத்தியை யெழுப்புகிறது.

கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
 மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமற் காத்துன்னைக்
 கூவுவான் வந்துநின்றோம் கோது குலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு
 மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய

தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (அ)

(ப - ரை.) கீழ் - கீழ்த்திக்கில், வானம் - ஆகாயம், வெள்ளென்று - வெளுத்ததென்று, எருமை - மஹிஷங்கள், சிறுவீடு - சிறிது விடுதலாய், மேய்வான் - (பனிப்புல்லை) மேயும்பொருட்டு, பரந்தனகாண் - ஸ்வேச்சையாக வனங்களிலே வர்த்தித்தது; மிக்குள்ள - உன்னை யொழிந்த, பிள்ளைகளும் - பெண்பிள்ளைகளும், போவான் - போகிறதற்காக, போகின்றாரை - போகின்றவர்களை, போகாமல் - போகாதபடிக்கு, காத்து - தடுத்து, உன்னைக் கூவுவான் - உன்னை அழைக்கவேண்டி, வந்து - நாங்களே வந்து, நின்றோம் - வாசலிலே நிற்கிறோம், கோதுகுலமுடைய - களனுஹலுடைய, பாவாய் - பெண்பிள்ளாய், எழுந்திராய் - எழுந்திரு; பாடி - ஸ்ரீ க்ருஷ்ணன் கல்யாண குணங்களை யநுசந்தித்து, பறை - வாத்ய விசேஷத்தை, கொண்டு - எடுத்துக்கொண்டு, மா - குதிரை வடிவுகொண்டு வந்த கேஸி என்பவனது, வாய் - வாயை, பிளந்தானை - இருபிளவாகக்கீண்டவனை, மல்லரை - சாணூராதி மல்லர்களை, மாட்டிய - ஸம்ஹரித்த, தேவாதிதேவனை - தேவர்களுக்குத் தேவனானவனை, சென்று - சந்நிக்குச் சேர்ந்து, நாம் - நாமெல்லாரும், சேவித்தால் - ப்ரபத்தி பண்ணினால், ஆவாவென்று - ஐயோ ஐயோ வென்று, ஆராய்ந்து - விசாரித்து, அருள் - க்ருபை பண்ணுவான்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கிழக்கு வெளுத்தது எருமைகள் பனிப்புல்மேய வயலெங்கும் பரந்தன; ஆயர்பாடியில் பெண்பிள்ளைகள் நீராடப் போகப் போனவர்களைத் தடுத்து உன்னை அழைத்துப் போகவந்தோம்; 'நாம்' நோன்புக்காகச் சென்று கண்ணனைச் சேவித்தால் அவன், நமக்கருள் செய்வன்; நீ அவசியம் வருவாயாக' வென்று, கண்ணனும் மதிக்கும்படி பெருமையுடையவள் ஒருத்தியை யெழுப்புகிறது.

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேற் கண்வளரும்
மாமான் மகளே மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீ ரவளை யெழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ வன்றிச் செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (௯)

(ப - ரை.) தூ - ச்லாக்யமான, மணி - மாணிக்க கசிதமான, மாடத்து - மாளிகையில், சுற்றும் - சுற்றிலும், விளக்கு - திரு விளக்குகள், எரிய - ஜ்வலிக்க, தூபம் - சாம்ப்ராணி தூப மானது, கமழ - பரிமளிக்க, துயிலணைமேல் - ஹம்ஸ தூளிகா தல்பத்திலே, கண்வளரும் - சயனிக்கும், மாமான் மகளே - அம்மான் பெண்ணே, மணிக் கதவம் - மாணிக்கக் கதவினுடைய, தாள் திறவாய் - பூட்டை நீ திறப்பாயாக; மாமீர் - அம்மாமீர், அவளை - அந்தப் பெண்பிள்ளையை, எழுப்பீரோ - எழுப்பப் போகாதோ? உன்மகள்தான் ஊமையோ - உன்மகள் வாக்கிந்த்ரிய மில்லாதவளோ? அன்றி - அல்லாமல், செவிடோ - ஸ்ரோத்ரேந் த்ரிய மில்லாதவளோ? அனந்தலோ - அபாராத்திரியில் நித் திரையோ? ஏமம் - காவலிலே ப்ரவேசித்தனளோ? பெருந் துயில் - பெரிய நித்திரையோ? மந்திரப்பட்டாளோ - மந்திரித்தா ருண்டோ? மாமாயன் - ஆச்சர்யகுண சேஷ்டிதன், மாதவன் - ஸ்ரீயஃபதி, வைகுந்தன் - வைகுந்தநாதன், என்றென்று - என்று சொல்லிச் சொல்லி, நாமம் - திருநாமம், பலவும் - ஸஹஸ்ர நாமங்களும், நவின்று - சொல்லுவோம்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணன் வந்தபோது வருகிறுனென்று அநாத ரித்து மணி மாடத்தில் புஷ்பசயநத்தில் படுத்து அகில்புகை கமழச் சுகமாக உறங்கிக்கொண்டிருக்கும் ஒருத்தியைக் கிட்டி,

மைத்துனச்சி முறைபாராட்டி, அம்மான் மகளே, நீ கதவைத்திற வாய் என்று எழுப்ப அவள் எழுந்திராதிருக்கவே, உன் பெண் என்ன ஊமையோ, செவிடோ, அயர்ந்தாளோ, பெரும் பொழு துறங்கும்படி யாரேனும் மந்திரம் செய்தார்களோ, எம்பெரு மானது திருநாமங்களைச் சொல்லி நீ அவளை யெழுப்புவாயாக என்று அவள் தாயாரை வேண்டுகிறது.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்
    மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார்.
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
    போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
    தோற்று முனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்த லுடையாய் அருங்கலமே
    தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (௧0)

(ப - ரை.) நோற்று - நோன்பு நோற்று, சுவர்க்கம் - ஸ்வர்க் கத்திலே, புகுகின்ற - ப்ரவேசிக்கத்தக்க, அம்மனாய் - ஸ்வாமி யானவளே? மாற்றமும் - மாறுத்தரமும், தாராரோ - சொல்லாரோ, வாசல் - கதவை, திறவாதார் - திறவாதவர்கள்? நாற்றம் - பரி மளத்தையுடைய, துழாய் - திருத்துழாய்மாலையை, முடி - திரு முடியிலுடைய, நாராயணன் - நாராயணனானவன், நம்மால் - நம் மால், போற்ற - ஸ்தோத்ரம் செய்யப்பட்ட, பறை - புருஷார்த் தத்தை, தரும் - கொடுக்கிற, புண்ணியனால் - புண்யாத்மாவாலே, பண்டொரு நாள் - பூர்வகாலத்திலே, கூற்றத்தின் - மிருத்துவி னுடைய, வாய் - வாயிலே, வீழ்ந்த - பட்ட, கும்பகரணனும் - கும்பகர்ணனும், உனக்கே - உனக்குத் தானே, தோற்று - அப ஜயத்தை யடைந்து, பெருந்துயில்தான் - பெரிய நித்திரையை, தந்தானோ - கொடுத்தானோ? ஆற்ற - அதிகமாக, அனந்தலுடை யாய் - நித்திரையை யுடையவளே, அருங்கலமே - எங்கள் கோஷ் டிக்கு ஆபரணமானவளே, தேற்றமாய் வந்து - தெளிவுண்டாய்

வந்து, திற - கதவைத் திறப்பாயாக; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஸுக்ருத பலத்தால் ஸுகாநுபவம் செய்கிற பாக்கியவதியே கதவுதிறவாவிட்டாலும் ஒரு வார்த்தை கூடச் சொல்லலாகாதோ! ஸ்ரீராமனால் அடிக்கப்பட்டும் கும்பகர்ணன் உனக்குத் தோற்று அவன் பெரு முறக்கத்தை உனக்கே கொடுத்து விட்டானோ, உறக்கத்தடுமாற்ற மில்லாது நிதானித்து வந்து கதவைத்திற வென்று, கண்ணன் திருமாளிகைக்கு அடுத்த மாளிகையுடையா ளொருத்தியை யெழுப்புகிறது.

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
  செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
  புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்துநின்
  முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாடச்
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி நீ
  எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (கக)

(ப - ரை.) கற்று - கன்றுநின்ற, கறவை - பசுக்களினுடைய, பல - அநேகங்களாயிருக்கிற, கணங்கள் - ஸமூஹங்களை, கறந்து - பால்பீசி, செற்றார் - ஸத்துருக்களினுடைய, திறம் - பலம், அழிய - அழியும்படியாக, சென்று - தண்டயாத்திரைபண்ணி, செரு - யுத்தத்தை, செய்யும் - பண்ணும்படியான, குற்றம் - அக்ருத்யம், ஒன்றில்லாத - ஒன்றுமில்லாத, கோவலர்தம் - கோபாலவம்சத்திற்கு, பொற்கொடியே - ஸ்ப்ருஹணீயமானவளே, புற்றரவல்குல் - புற்றிலேயிருக்கிற ஸர்ப்பத்தைப்போன்ற நிதம்பப்ரதேசத்தையுடையவளே, புனமயிலே - காட்டிலிருக்கிற மயில் இறகுபோன்ற அளகபாரத்தை யுடையவளே, போதராய் - வாராய், சுற்றத்து - பந்துஜனமான, தோழிமார் - பெண்கள், எல்லாரும் வந்து - எல்லாரு

மாய் வந்து, நின்முற்றம் புகுந்து - உன் அகத்து வாசலிலே ப்ர வேசித்து, முகில்வண்ணன் - நீலமேகச்யாமளனான ஸர்வேச்வர னுடைய, பேர் - திருநாமத்தை, பாட - பாடிக்கொண்டுவர, சிற் றாதே - அசங்காதே, பேசாதே - பேசாமல், செல்வம் - பகவதநு பவைச்வர்ய முடைய, பெண்டாட்டி நீ - பெண்ணேநீ, எற்றுக் குறங்கும் பொருள் - நித்திரிக்கிற அபிப்பிராயந்தானென்ன? எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கண்ணனோடொத்த பருவமாய், அவனைப்பெற நானே நோற்பேன், வேண்டுமாகில் அவனேநோற்கவென்று கிடப்பாளொருத்தியைக்கிட்டி, உன் உறவின் முறையாரும் தோழி யரு மெல்லாரும் திரண்டு வந்து முற்றத்து நின்று கடல் வண்ணன் பேர்பாடிக் கொண்டிருக்கவும், நீ சற்றும் சலியாமலும் ஓர் பேச் சும் பேசாமலு முறங்குவ தெதற்காக வென்று எழுப்புகிறது.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (கஉ)

(ப - ரை.) கனைத்து - கூப்பிட்டுக் கொண்டு, இளம் கற்று எருமை, கன்றுக்கிரங்கி - தன்கன்றின்விஷயத்தில் தயையுண் டாகி, நினைத்து - அவற்றை நினைத்து, முலைவழியே - ஸ்தந பாரங்களாலே, நின்றுபால்சோர - பால் இடைவிடாமல் பெருக, நனைத்து - ஈரமாக்கி, இல்லம் - க்ருஹமெல்லாம், சேறாக்கும் - சேறாகப்பண்ணும், நல் செல்வன் - நல்ல ஸம்பத்துடையவனுடைய, தங்காய் - ஸோதரியானவளே, பனி - பனியானது, தலைவீழ -

தலைமேலே வீழ, நின்வாசல் கடைபற்றி - உன்வாசல்படியைப் பிடித்துக் கொண்டு, சினத்தினால் - கோபத்தினால், தென்னிலங்கை - அழகிய இலங்கைக்கு, கோமானை - ராஜாவான ராவணனை, செற்ற - ஸம்ஹரித்த, மனத்துக்கு இனியானை - மநஸ்ஸுக்கு போக்யதாதனான சக்ரவர்த்தி திருமகனை, பாடவும் - பாடச் செய்தேயும், நீ வாய் திறவாய் - வாயைத்திறவாமலிருக்கிறாய், இனித்தான் எழுந்திராய் - இனியாயினும் நித்திரையை விட்டெழுந்திருப்பாய், ஈதென்ன பேருறக்கம் - இது என்ன பெரிய நித்திரை, அனைத்தில்லத்தாரும் அறிந்து - எல்லாப் பெண்களுமறிந்தார்கள், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஒரு க்ஷணமும் கண்ணனை விட்டுப் பிரியாதுபின் தொடர்ந்து பரிவோடு நோக்கிக்கொண் டிருப்பா னொருவனது தங்கையைக்கிட்டி நாங்கள் பனியில் நின்றுகொண்டு ஸ்ரீ ராமாவதார விருத்தாந்தத்தைப் பாடிக்கொண்டிருக்கவும் நீ வாய்திறக்கவில்லையே! ஊராரெல்லாரும் விழித்துக்கொண்டார்கள். இனியாவது நீ யெழுந்திருப்பாயாக என்று எழுப்புகிறது.

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (௧௩)

(ப - வா.) புள்ளின்வாய் கீண்டானை - பகாஸுரனுடைய வாயைப் பிளந்தவனாய், பொல்லா - துஷ்டனான, அரக்கனை - ராக்ஷஸனான ராவணனை, கிள்ளிக் களைந்தானை - த்ருணப்ராய

மாக வெள்ளி எழுந்த சக்ரவர்த்தி திருமகனுடைய, கீர்த்திமை - வீர சரிதத்தை, பாடிப் போய் - பாடிக் கொண்டு போய், பிள்ளைக ளெல்லாரும் - எல்லாப் பெண்பிள்ளைகளும், பாவைக்களம் - ஸம்கேதஸ்தலம், புக்கார் - பிரவேசித்தார்கள், வெள்ளி எழுந்து - சுக்ரனுதயமாய், வியாழம் - ப்ருஹஸ்பதி, உறங்கிற்று - அஸ்த மித்தான், புள்ளுஞ் சிலம்பினகாண் - பக்ஷிகளுங் கூப்பிடுகிறது, போதரிக் கண்ணினாய் - புஷ்பத்திலே யிருக்கிற வண்டுக்கு சத்ரு சமான நேத்ரங்களையுடையவளே, குள்ளக்குளிர - அத்யந்தம் குளி ரும்படியாக, குடைந்து - அவகாஹித்து, நீராடாதே - தீர்த்த மாடாதே, பள்ளிக்கிடத்தியோ - சயநத்தில் நித்ரிக்கிறாயோ, பாவாய்நீ - அழகிய பெண்ணேநீ, நன்னாளால் - நல்லதினத்திலே, கள்ளம்தவிர்ந்து - கபடத்தை விட்டு, கலந்து - எங்களோடே கூட வந்து கலக்க வேண்டும், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம் பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஸ்ரீராமாயணமும் - பாரதமும் ஸ்ரீ பாஞ்சராத்தி ரமு மெல்லாம் பாடினோம். பெண்களெல்லாரும் ஸங்கேதஸ்தா னம் போய்ச் சேர்ந்தார்கள். பிருஹஸ்பதி அஸ்தமித்தது; சுக்ரன் உதயமாயிற்று; பறவைகள் உணர்ந்து கூவுகின்றன; எல்லாரும் கூடிக் குளிரக்குளிர நீராட வேண்டியிருக்க நீ இங்குறங்குவதோ? கபடத்தைவிட்டுக் கலந்தெழுந்து வாவென்று கண்ணழகுடையா ளொருத்தியை யெழுப்புகிறது.

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
 செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண்
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
 தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும்
 நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்
சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்
 பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (௧௪)

(ப - ரை.) உங்கள் - உங்களுடைய, புழைக்கடைத் தோட்டத்து - புழைக்கடைத் தோட்டத்தின்கண், வாவியுள் - கிணற்றிலே, செங்கழுநீர் - செங்கழுநீர் புஷ்பமானது, வாய்நெகிழ்ந்து - முகவிகஸிதமாய், ஆம்பல் - நீலோத்பல புஷ்பமானது, வாய் கூம்பினகாண் - முகுளிதமாய்த்து, செங்கல்பொடி - காவிப்பொடி துவைத்த, கூறை - காஷாயாம்பரதரம்பண்ணி, வெண்பல்-ஸ்வேத தந்தங்களையுடைத்தான, தவத்தவர் - தபோவேஷரான ஸந்யாஸிகள், தங்கள் - தங்களுடைய, திருக்கோயில் - ஆலயங்களில், சங்கிடுவான் - குச்சிகொண்டுவாங்க, போகின்றார் - போகாநின்றனர், எங்களை - எங்களை, முன்னம் - முன்னதாக, எழுப்புவான் - எழுப்புகிறதற்காக, வாய்பேசும் - வார்த்தைசொன்ன, நங்காய் - பூர்ணயானவளே, எழுந்திராய் - எழுந்திருப்பாய், நாணாதாய் - வெட்கமில்லாதவளே, நாவுடையாய் - (அன்றிக்கே) வாயாடியானவளே, சங்கொடு - ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடு, சக்கரம் - திருவாழியையும், ஏந்தும் - தரித்துக்கொண்டிருக்கிற, தடக்கையான் - கம்பீரமான ஹஸ்தங்களையுடைய, பங்கயக்கண்ணனை - புண்டரீகாக்ஷனை, பாட - பாடுகிறதற்கு எழுந்திராய், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) உங்கள்வீட்டுத் தோட்டத்தில் செங்கழுநீர்மலர்கள் மலர்ந்தன, ஆம்பல் குவிந்தன, ஸந்நியாஸிகள் திருவாராதனம் செய்யப் போகிறார்கள், எங்களையெல்லாம் நீயே யெழுப்புவதாகச் சொன்னாயே. நன்றாக நிறைவேற்றினை. வெட்கமில்லையோ எது எவ்வாறானாலும் உன் சொல்வினிமை பெரிது. கண்ணனைப் பாடிக்கொண் டெழுந்திராயென்று ஒருத்தியை யெழுப்புகிறது.

எல்லே யிளங்கிளியே யின்னம் உறங்குதியோ
'சில்'லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை [ள்
எல்லாரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொ

வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (கரு)

(ப - ரை.) எல்லே - (எடி) ஏஹோவாராய், இளங்கிளியே - பால்யத்தையுடைத்தான கிளிபோலே பேசுகிறவளே, இன்னமுறங்குதியோ - இன்னமும் நித்ரிக்கிறாயோ, சில்லென்றழையேல்மின் - சிலுக்கு சிலுக்கென்றழைக்கவேண்டா, நங்கைமீர் - பூர்ணமானவர்களே, போதருகின்றேன் - வருகிறேன், வல்லை - சாமர்த்தியமானவளே, உன்கட்டுரைகள் - உன்னுடைய சமத்காரவார்த்தைகளையும், பண்டே - பூர்வமே, உன்வாயறிதும் - உன்வாயாடித்தனத்தையும் நாங்களறிந்திருக்கிறோம், வல்லீர்கள்-ஸமர்த்தர்கள், நீங்களே - நீங்களேயாகவேணும், நானேதானாயிடுக - நான்தானேயாயிருக்கட்டும், ஒல்லை - சீக்கிரமாக, நீபோதாய் - நீ வாராய், உனக்கென்னவேறுடையை -உனக்கு வேறு அநுபவந்தானென்ன, எல்லாரும் - எல்லாப்பெண்களும், போந்தாரோ - வந்தார்களோ? போந்தார் - வந்தார்கள், போந்தெண்ணிக்கொள் - வந்து கணித்துக்கொள், வல்லானை கொன்றானை - பலத்தை யுடைத்தான குவலயாபீடமென்கிற யானையை ஸம்ஹரித்தவனை, மாற்றாரை - சத்ருக்களினுடைய, மாற்று - பலத்தை, அழிக்க - போக்கடிக்க, வல்லானை - ஸமர்த்தனை, மாயனை - ஆச்சர்யகுண சேஷ்டிதமுடைய ஸர்வேச்வரனை, பாட - பாடும்பொருட்டு வாராய், எல்ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) எல்லோரும் திரண்டுவந்த சேர்த்தியைக் காணவேண்டுமென்று கிடந்தாளொருத்தியைக் கிட்டி, "கிளிமொழிவாய் இன்னுமுறங்குவதேோ" என்றார்கள். "இதோ வருகின்றேன், சலசல வென்னாதீர்கள்" என்றாள். "என்ன சமர்த்து பேசுகிறாய், யாம் உன்வாயை முன்பேயறிவோம்" என்றார்கள். "பேசுந்திறத்தில் வலியவர்கள் நீங்களே, நான், தனியேயாகிறேன்" என்றாள். "நீமாத்திரம் தனிமையாவதென், விரைவில் எழுந்துவா" என்றார்கள். "எல்லோரும் வந்துவிட்டார்களோ" என்றாள். "வந்து

விட்டார்கள் உனக்கு நம்பகமில்லையாகில் வந்து நீ எண்ணிக்கொள் நாமெல்லாரும்கூடிக் கண்ணனைப் பாடவேண்டும், வருவாயாக" என்றார்கள் என்கிறது.

[கீழ்ப்பாட்டுக்களில் உத்தர ப்ரத்யுத்தரம் மறைந்து கிடக்கிறது. இதில் வெளிப்படையாயிருக்கிறது.]

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
 கோயில் காப்பானே கொடித்தோன்றுந் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவம் தாள்திறவாய்
 ஆயர் சிறுமிய ரோமுக் கறைபறை
மாயன் மணிவண்ண னென்னலே வாய்நேர்ந்தான்
 தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மாநீ
 நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (கசு)

(ப-ரை.) நாயகனாய் நின்ற - ஸ்வாமியாயிருக்கிற, நந்தகோபனுடைய நந்தகோபனுடைய, கோயில்காப்பானே - திருமாளிகையைக் காவல்காக்கிறவனே, கொடிதோன்றும் ஜயத்வஜம் கட்டின, தோரண-மங்களார்த்தமாக தோரணங்கள் கட்டின, வாயில் - திருவாசலை, காப்பானே - காக்குமவனே, மணிக்கதவம் - மாணிக்கக் கதவினுடைய, தாள் - பூட்டை, திறவாய்- திறக்கக்கடவாய், ஆயர் - இடையருடைய, சிறுமியரோமுக்கு - பெண்பிள்ளைகளான எங்களுக்கு, அறைபறை - வாத்ய விசேஷமான கைங்கர்யத்தைத் தருகிறேனென்று, மாயன் - குண சேஷ்டிதனான, மணிவண்ணன் - மாணிக்கவர்ணனான க்ருஷ்ணன், நென்னலே - நேற்றே, வாய்நேர்ந்தான் - அருளிச் செய்தான்; தூயோமாய் வந்தோம் - பரிசுத்தராய் வந்தோம்; துயிலெழபாடுவான் - நித்ரையை விட்டெழுந்திருக்கும்படி பாடவந்தோம்; வாயால் - வாக்காலே, முன்ன முன்னம் - முதல் முதல், மாற்றாதே - தடுக்காதே, அம்மா - ஸ்வாமீ! நீ - நீ, நேச - ஸ்நேஹத்தையுடைய, நிலைக்கதவு - நிலை

யிலே யிருக்கிற கதவை, நீக்கு - திறக்க வேண்டும், எல் ஓர் - தருந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இப்படி ஒவ்வொருத்திப் பத்து மாளிகையாக எழுப்ப ஐந்து லக்ஷம் குடியில் உள்ள பெண்களும் உணர்ந்து ஒன்று சேர்ந்து ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகைக்கு வந்து திருக்கோயில் காப்பானை யெழுப்பி அவனநுமதி பெற்று உள்ளே சென்று திருவாசல் காப்பானைக்கிட்டி இடைப்பெண்களாகிய வெங்களுக்கு நோன்புக்குப் பறைதருவதாகக் கண்ணன் நேற்றே அருளிச் செய்தான். அவனைத் திருப்பள்ளியுணர்த்தும் பொருட்டுப் பரிசுத்தமான மனத்தோடு வந்தோம், முன்ன முன்னம் நீவாயா லொன்றும் சொல்லித்தடுக்காதே கொள்; தான்திறந்து கதவை நீக்குவாயாக வென்று வேண்டுகிறது.

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமான் நந்தகோ பாலா வெழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதா யறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே யுறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். (கஎ)

(ப - ரை.) அம்பரமே - வஸ்திரமும், தண்ணீரே - குளிர்ந்த ஜலமும், சோறே - அன்னமும், அறஞ்செய்யும் - தானம்பண்ணுகிற, எம்பெருமான் - எங்களுக்கு ஸ்வாமியான, நந்தகோபாலா - ஸ்ரீ நந்த கோபரே, எழுந்திராய் - எழுந்திரும், கொம்பனார்க் கெல்லாம் - பெண்களுக்கெல்லாம், கொழுந்தே - ப்ரதானமானவளே, . குலவிளக்கே - இடையர்குலத்துக் கெல்லாம் தீபம் போலே ப்ரகாசமானவளே, எம்பெருமாட்டி - எங்களுக்கு ஸ்வாமினியானவளே, யசோதாய் - யசோதையே, அறிவுறாய் - உணர்ந்தாய்; அம்பரம் - ஆகாயத்தை, ஊடறுத்து - இடையறுத்து

ஓங்கி உலகளந்த - விச்வரூபங்கொண்டு உலகத்தை யளந்த, உம்பர்கோமானே - தேவாதிதேவனே, உறங்கா தெழுந்திராய் - நித்திரியாமலெழுந்திருக்காய்; செம் - ரத்தினமயமான, பொன் கழல் - ஸ்ப்ருஹணீயமான விருதுவண்டயங்களை, அடி - திருவடிகளுடைய, செல்வா - ஸம்பத்தையுடைய, பலதேவா - பலராமனே, உம்பியும் - தம்பியும், நீயும் - நீயும், உறங்கேல் - நித்ரை போகாமலெழுந்திருக்க வேண்டும், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ர்.) ஸ்ரீ நந்தகோபரையும் யசோதைப்பிராட்டியையும் கண்ணனையும் பலராமனையும் எழுப்புகிறது.

உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழுங் குழலீ கடை திறவாய்
வந்தெங்கும் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையாற் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (கஅ)

(ப - ரை.) உந்து மதகளிற்றன் - ஸ்ரவிக்கிற மலஜலத்தையுடைய கஜத்தைத் தள்ளும் பலத்தைக் கொண்டிருக்கிற, ஓடாத - தோலாத, தோள்வலியன் - புஜபலமுடைய, நந்தகோபாலன் - நந்தகோபருடைய, மருமகளே - நாட்டுப் பெண்ணான, நப்பின்னாய் - நப்பின்னைப்பிராட்டி, கந்தங் கமழும் - அத்யந்தம் பரிமளத்தைக்கொண்டு வீசுகிற, குழலீ - அளகபாரத்தையுடையவளே, கடை - தாளை, திறவாய் - திறக்கக்கடவாய்; வந்து - ஸ்வஸ்தானத்தில் நின்றும் புறப்பட்டுவந்து, எங்கும் - ஸர்வதிக்குகளிலும், கோழியழைத்தனகாண் - கோழிகூவுகிறதுகாண், மாதவிப்பந்தல்மேல் - வளர்ந்தகால மல்லிகைப் பந்தல்மேல், பல்கால் -

அநேகதரம், குயில் - கோகிலங்களுடைய, இனங்கள் - ஸமூஹங்கள், கூவினகாண் - கூப்பிடுகிறதுகாணும், பந்து - செண்டினாலே, ஆர் - பூர்ணமான, விரலி - விரல்களையுடையவளே, உன் மைத்துனன் - உன்பர்த்தாவினுடைய, பேர்பாட - திருநாமத்தைப் பாடுகைக்கு, செந்தாமலரக்கையால் - சிவந்ததாமரைக்கு ஸத்ருசமான கையாலே, சீரார் - ஸௌந்தர்ய பூரிதமான, வளை - கங்கணங்கள், ஒலிப்ப - கோஷிக்க, மகிழ்ந்து - ஸந்தோஷித்துக்கொண்டு, வந்து - நீதானேவந்து, திறவாய் - கதவைத் திறக்கவேண்டும், ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) கோழி எங்கும் கூவின; மல்லிகைப்பந்தலில் குயில்கள் கூவுகின்றன; உனது நாயகனது திருநாமத்தை நாங்கள் பாடும்படி எங்களுக்கருள்செய்து நீ நாலடி நடந்துவந்து வளையல்கள் ஒலிக்குமாறு செந்தாமரைக்கையால் கதவைத்திறப்பாயாக வென்று நப்பின்னைப் பிராட்டியை, வேண்டியெழுப்புகிறது.

குத்துவி ளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில் மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை
எத்தனைப் போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். (கக)

(ப - ரை.) குத்துவிளக்கெரிய - குத்துவிளக்கு ப்ரகாசிக்க, கோட்டுக்கால் - தந்தக்கால்களையுடைய, கட்டில்மேல் - தல்பத்தின் மேலே, மெத்தென்ற - மிருதுவான, பஞ்ச - அழகு முதலிய அஞ்சுகுணங்களையுடைத்தான, சயநத்தின்மேல் - திருப்பள்ளியிலே, ஏறி - ஏறியிருந்து, கொத்தலர் பூங்குழல் - கொத்துக்களால் விகஸிக்கப்பட்ட புஷ்பங்களை யுடைத்தான கேசங்களையுடைய, நப்பின்னை - நப்பின்னைப் பிராட்டியினுடைய, கொங்கைமேல் - திரு

முலைத்தடங்கள் மேலே, வைத்துக் கிடந்த - வைத்துக்கொண்டு கிடக்கிற, மலர் - விகஸிதமான, மார்பா - வக்ஷஸ்தலத்தை யுடையவனே! வாய் திறவாய் - திருவாய் மலர்ந்தருளாய்! மைத் தடங் கண்ணினாய் - மையணிந்த விசாலமான கண்களையுடையவளே, நீ - நீ, உன்மணாளனை - உன்னுடைய நாதனை, எத்தனைபோதும் - ஒரு அற்பகாலமாகிலும், துயிலெழ - நித்திரையினின்று மெழுந்திருக்க, ஒட்டாய்காண் - ஸம்மதிக்கிற தில்லை, எத்தனையேலும் - அற்பகாலமும், பிரிவு - அவனைப் பிரிந்து, ஆற்றகில்லாயால் - ஸஹிக்கமாட்டாமலிருக்கிறாய், ஆல் - ஆச்சர்யம், தத்துவமன்று - வ்யவஹாரமன்று, தகவு அன்று - ஸ்வரூபமன்று, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நப்பின்னைப் பிராட்டிவந்து கதவைத்திறக்கப்புக, நம்மவர்க்கு இவள் திறக்க முற்பட்டாளாக வொண்ணாதென்று மற்கட்டாக இவளைக் கட்டிப் படுக்கையில் கிடத்தித்தானும் மயங்கி விட்ட கண்ணனை நோக்கி, 'நீ ஒரு வார்த்தை அருளிச் செய்யலாகாதோ?' வென்ன, அவன் வார்த்தை சொல்லப்புக, நப்பின்னைப் பிராட்டி ஆர்த்த விஷயத்தில் இவன் நம்மில் முற்பாடனாக வொண்ணாதென்று நினைத்துச் சைகைசெய்து கழுத்தைக்கட்டி அமிழ்த்த, நீ பெண்ணாயிருந்தும் பெண்வருத்தமறியாது இப்படித் தகைவது தகாது, ஒரு க்ஷணமும் பிரியமாட்டுகிறதில்லையே, எத்தனைப் போதுறங்குவதோ என்கிறார்கள் என்கிறது.

முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய்
செப்ப முடையாய் திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பங் கொடுக்கும் விமலா துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை
இப்போதே யெம்மை நீ ராட்டேலோ ரெம்பாவாய். (௨௦.

(ப - ரை.) முப்பத்து மூவர் - முப்பத்து முக்கோடி, அம ரர்க்கு - தேவர்களுக்கும், முன்சென்று - முன்பாக தண்டயாத் திரை பண்ணி, கப்பம் - கப்பத்தை, தவிர்க்கும் - போக்குகிற, கலியே - பலசாலியே, துயிலெழாய் - நித்திரையை விட்டெழுந் திரு; செப்பமுடையாய் - க்ஷேமத்தையுடையவனே, திறலுடை யாய் - அவர்கள் விரோதிகளை யடக்கும் வல்லமை யுடையனாய், செற்றார்க்கு - சத்ருக்களுக்கு, வெப்பம் - பயத்தை, கொடுக்கும் - தருகிற, விமலா - நிர்மலனே, துயிலெழாய் - நித்திரையை விட் டெழுந்திரு, செப்பு - கலசத்துக்கு, அன்ன - ஸத்ருஸமான, மென் - ம்ருதுவான, முலை - திருமுலைத் தடங்களையுடைய, செவ் வாய் - சிவந்த திருப்பவளமுடைய, சிறு - ஸூக்ஷ்மமான, மருங் குல் - மத்ய ப்ரதேசமுடைய, நப்பின்னை நங்காய் - நப்பின்னைப் பிராட்டியென்னுந் திருநாமமுடைய பூர்ணையான, திருவே - ஸ்ரீயே, துயிலெழாய் - நித்திரையை விட்டெழுந்திராய், உக்கமும் - திரு வாலவட்டமும், தட்டொளியும் - வெங்கலக்கண்டியும், தந்து - கொடுத்து, உன்மணாளனை - உன்னுடைய நாயகனை, இப்போதே - இந்த வேளையிலே, எம்மை - எம்மை, நீராட்டு - நீராட்டி வைக்கக் கடவாய்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இருவரும் வாய்திறவா திருந்தவாறே திருவுள்ளம் புண்பட்டதோ என்று பயந்து முன்னே ஆர்த்த ரக்ஷணத்துக்காக, நீ பெரும்பாடு பட்டாயல்லையோ, இன்றும் எங்களுக்காகத் திருப் பள்ளி யுணர்ந்தருளலாகாதோ என்று கண்ணனையும், "எங்க ளுக்கு வேண்டிய உபகரணங்களைக் கொடுத்து எங்களை நோன்புக்கு நீராடச் செய்ய வேண்டு" மென்று நப்பின்னைப் பிராட்டியையும் வேண்டுகிறது.

ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே அறிவுறாய்
ஊற்ற முடையாய் பெரியாய் உலகினில்

தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய்
மாற்ரு ருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்ருது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.(உக)

(ப - ரை.) எற்ற - எந்தின, கலங்கள் - குடங்கள், எதிர் பொங்கி - எதிராகப் பொங்கி, மீதளிப்ப - மேலே வழிந்து வர, மாற்ருதே - இடை விடாமல், பால் சொரியும் - பாலைப்பீச்சும், வள்ளல் - கொடுக்குந் தன்மை யுடைய, பெரும் - பெரிய, பசுக்கள் - ஆக்கள், ஆற்ற - அதிகமாக, படைத்தான் - ஸம்பாதித்தவனுடைய, மகனே - பிள்ளையானவனே, அறிவுருய் - தெளிவோடே எழுந்திராய், ஊற்ற முடையாய் - ஆச்ரிதபக்ஷபாதமுடையவனே, பெரியாய் - ஸர்வஸ்வாமித்வபரனுனவனே, , உலகினில் - பூமியிலே, தோற்றமாய் நின்ற - திருவவதரித்த, சுடரே - தேஜோமயனே, துயிலெழாய் - படுக்கையினின்று மெழுந்திரு; மாற்ருர் - சத்ருக்கள், உனக்கு - உமக்கு, வலிதொலைந்து - பராஜிதராய், உன் வாசற்கண் - உன்னுடைய அரண்மனைவாசலிலே, ஆற்ருது - பொறுக்கமாட்டாதே, வந்து - எல்லாரும் வந்து, உன் அடிபணியுமாப்போலே - தேவரீர் திருவடிகளுக்குக் கைங்கர்யம் பண்ணுமாப்போலே, போற்றி - மங்களாசாஸநம் பண்ணி, யாம் வந்தோம் - யாம் வந்தோம், புகழ்ந்து - ஸந்தோஷித்துக்கொண்டு, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நாமெல்லோரும் சேர்ந்து கண்ணனை அர்த்திப்போம் வாருங்கோளென்று நப்பின்னைப்பிராட்டி அருளிச்செய்ய, எல்லாரும்சேர்ந்து அவன் குணங்களுக்குத் தோற்ருர் தோற்றபடியே சொல்லிக்கொண்டு, உன் வலிமைக்குத் தோற்றப் பகைவர் உன் வாசற்படியில் வந்து நின்று உன்னைத் தொழுமாப்போலே நாங்கள் அபிமானத்தைவிட்டுத் தாஸபூதர்களாய் உனக்கு மங்களாசாஸநம் செய்யவந்தோம், நீ திருப்பள்ளியுணர்ந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறது.

அங்கண்மா ஞாலத் தரச ரபிமான
  பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
  கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறிச்சிறிதே யெம்மேல் விழியாவோ
  திங்களு மாதித்திய னுமெழுந்தாற்போல்
அங்க ணிரண்டும்கொண் டெங்கண்மேல் நோக்குதியேல்
  எங்கண்மேற் சாப மிழந்தேலோ ரெம்பாவாய். (உஉ)

(ப - ரை.) அங்கண் - அழகான ஸப்தத்வீபங் களையுடைய, மாஞாலத்து - மஹாப்ருதிவியில், அரசர் - ராஜர்கள், அபிமான பங்கமாய்வந்து - பக்தாபிமானிகளாய்வந்து, நின் - தேவரீருடைய, பள்ளிக்கட்டிற் கீழே - ஹம்சதூளிகா தல்பத்தின்கீழே, சங்கம் - ஸமூஹமாய், இருப்பார்போல் - இருக்கிறவர்களைப்போலே, வந்து - எல்லாரும் வந்து, தலைப்பெய்தோம் - கிட்டப்பெற்றோம்; கிங்கிணி - சலங்கைபோலே, வாய்ச்செய்த - விகஸிதமான, தாமரைப் பூப்போல - தாமரைப் புஷ்பத்தைப்போலே, செங்கண் - சிவந்திருக்கிற கண்மலர்களால், சிறிச்சிறிதே - கொஞ்சங் கொஞ்சமாக, எம்மேல் - எங்கள்மேலே, விழியாவோ - கடாக்ஷிக்கிறதில்லையோ? திங்களும் - சந்திரனும், ஆதித்தியனும் - ஸூர்யனும், எழுந்தாற்போல் - உதயமானாற்போலே, அம் - அழகான, கண் - திருக்கண்மலர், இரண்டுங்கொண்டு - இரண்டையுங்கொண்டு, எங்கள்மேல் - எங்களுடைய விஷயத்தில், நோக்குதியேல் - கடாக்ஷிப்பாயாகில், எங்கள்மேல்சாபம் - எங்களைப்பற்றி யிருக்கிற பாபங்கள், இழந்து - நசித்துப்போம்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இவர்களபிப்பிராயத்தை நன்றாயறிய வேண்டுமென்று கண்ணன் பேசாதே கிடக்க, "நாங்கள் அபிமானத்தை விட்டோம். போக்கற்று நிற்கிறோம்; அநந்யார்ஹர்களாய் வந்தோம்; தாமரைக்கண்ணால் நோக்கி யருளவேணும்; சந்த்ரஸூரி

யர்கள் போன்ற கண்களினால் கடாக்ஷித்தருளினால் எங்கள் துயர மெல்லாம் மாறப்பெறுவோம் என்று பிரார்த்திக்கிறது.''

மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
  சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி
  மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணாவுன்
  கோயினின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த
  காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (உ௩)

(ப - ரை.) மாரி - வர்ஷகாலத்தில், மலை - பர்வதத்தினுடைய, முழஞ்சில் - பிலத்திலே, மன்னி - நித்யாவாசம்பண்ணி, கிடந்து - படுத்துக்கொண்டு, உறங்கும் - நித்ரிக்கிற, சீரிய - ச்ரேஷ்டமான, சிங்கம் - ஸிம்ஹம், அறிவுற்று - தெளிவுற்றெழுந்திருந்து, தீவிழித்து - கோபாக்னி ஜ்வலிக்கக் கண்களைத் திறந்து, வேரிமயிர் - உசிதகந்தமுடைய மயிர்களானது, பொங்க - ஊர்த்துவமாக வெழுப்ப, எப்பாடும் - நாலுபக்கமும், பேர்ந்து - உடலசைந்து, உதறி - அவயவங்களை உதறிக்கொண்டு, மூரி நிமிர்ந்து - தீர்க்கமாக உடம்புமுறித்து, முழங்கி - ஸிம்ஹ நாதம்பண்ணி, புறப்பட்டு - பிலத்வாரத்திலிருந்து புறப்பட்டு, போதருமாபோலே - வருகிறதுபோலே, நீ - நீயும், பூவைப்பூ - அதஸீகுஸுமஸத்ருசமான, வண்ணா - காந்தியுடையவனே, உன் - தேவரீருடைய, கோயில்நின்று - திருமாளிகையிலிருந்து, இங்ஙனே - இவ்வளவும், போந்தருளி - எழுந்தருளி, கோப்புடைய - ஜயசீலமான, சீரிய சிங்காசனத்திருந்து - ச்ரேஷ்டமான ஸிம்ஹாசனத்தி லிருந்துகொண்டு, யாம் - நாங்கள், வந்த - வந்திருக்கிற, காரியம் - கார்யத்தை, ஆராய்ந்து - விசாரித்து, அருள் - க்ருபைபண்ணவேணும், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நப்பின்னைப்பிராட்டி பரிகரமாயிருந்து வைத்து, போக்கற்று நிற்கிறோம் என்பதோ, நீங்கள் போர நொந்தீர்களே, உங்கள் காரியம் செய்து தருகிறோம்; ஆக வேண்டுவதென்ன? என்று கண்ணன் கேட்டருள, "இப்படிக் குன்றுங் குரிச்சியாகக் கேட்கவமையாது மறைந்த காலத்தில் குகையில் உறங்கும் சிங்கம் உணர்ந்து உடம்பையுதறி நிமிர்ந்து புறப்பட்டு வருமாப்போலே உன் கோயிலிலிருந்து இங்கே எழுந்தருளி பேரோலக்கமாக இருந்து எங்கள் அபேக்ஷிதம்கேட்கவேண்டும்" என்று பிரார்த்திக்கிறது.

அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய். (உச)

(ப - ரை.) அன்று - வாமனாவதார காலத்திலே, இவ் வுலகம் - இந்த லோகங்களை, அளந்தாய் - அளவிட்ட உன்னுடைய, அடி - திருவடிகளுக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; சென்று - தண்டயாத்திரை பண்ணி, அங்கு - அவ் விடத்திலே, தென்னிலங்கை - தர்ஸநீயமான இலங்கையை, செற்றாய் - அராக்ஷஸமாகப் பண்ணின தேவரீருடைய, திறல் - பாஹு பலத்துக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; பொன்ற - நாசமாம்படி, சகடம் - ஸகடாஸுரனை, உதைத்தாய் - திருவடிகளால் உதைத்தான், புகழ் - பராபிவந ஸாமர்த்யத்துக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; கன்று - கன்றாய் வந்த வத்ஸாஸுரனை, குணிலா - எறிதடியாக, எறிந்தாய் - வீசினவனே, கழல் - திருவடிகளுக்கு, போற்றி - மங்களமாகக்கடவது; குன்று - பர்வதத்தை, குடையாய் - சத்ர

மாக, எடுத்தாய் - எடுத்தின உன்னுடைய, குணம் - குணத்துக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; வென்று - ஜயித்து, பகை - சத்ருக்களை, கெடுக்கும் - ஸம்ஹரிக்கிற, நின் - தேவரீருடைய, கையில் - ஸ்ரீஹஸ்தத்திலே யிருக்கிற, வேல் - ஆயுதத்துக்கு, போற்றி - மங்களமாகக் கடவது; என்றென்று - அநவரதமும், உன் - தேவரீருடைய, சேவகமே - பராக்ரமமே, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, பறைகொள்வான் - ப்ராப்யத்தை லபிக்கும் படியாக, இன்று - இன்றைக்கும், யாம் - நாங்கள், வந்தோம் - வந்திருக்கிறோம், இரங்கு - க்ருபைபண்ணு, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) இவர்கள் வேண்டிக்கொண்டபடி ஆஸ்தான மண்டபத்தளவும் எழுந்தருள, அவ் வழகைக் கண்டு வந்த காரியத்தை மறந்து "உலகமளந்த உன் திருவடிகளும் இலங்கை யழித்த வீரமும் சகடம் சிதைத்த சேவகமும் கன்றால் விளங்கனியுதிர்த்த வித்தகமும் கோவர்த்தனத்தைக் குடையாக எடுத்த குணமும் பகையழிக்கும் படையும் வாழியென்று உனக்குப் பல்லாண்டு பாடிப், பறைகொள்ள வந்தோம், நீ அருள் செய்ய வேண்டும்!" என்கிறார்கள் என்கிறது.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
 ஒருத்தி மகனா யொளித்து வளரத்
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
 கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
 அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
 வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (உரு)

(ப - ரை.) ஒருத்தி மகனாய் - அத்விதீயையான தேவகீ தேவிக்குப் புத்திரனாய், பிறந்து - அவதரித்து, ஓரிரவில் - ஒரு

ராத்திரியிலே, ஒருத்தி மகனாய் - அசோதைப்பிராட்டிக்கும் குமாரனாய், ஒளித்து - மறைத்து, வளர - வ்ருத்தியடையா நிற்க, தரிக்கிலானாகி - பொறுக்க மாட்டாதவனாய், தான் தீங்கு நினைந்த - தான் த்ரோஹத்தை நினைத்த, கருத்தை - அபிப்ராயத்தை, பிழைப்பித்து - நசிப்பித்து, கஞ்சன் - கம்ஸனுடைய, வயிற்றில் - கர்ப்பத்திலே, நெருப்பென்ன - நெருப்பென்னும்படியாக, நின்ற - எழுந்தருளியிருந்த, நெடுமாலே - வ்யாமோஹத்தையுடையவனே, உன்னை - தேவரீரை, அருத்தித்து - அர்த்தித்து, வந்தோம் - வந்திருக்கிறோம்; பறை தருதியாகில் - ப்ராப்யத்தைத் தந்தாயாகில், திருத்தக்க - உன்னுடைய விக்ரஹாநுபவம் பண்ணத்தக்க, செல்வமும் - ஸம்பத்தையும், சேவகமும் - ப்ராக்ரமத்தையும், யாம் - நாங்கள், பாடி - கீர்த்தித்து, வருத்தமும் தீர்ந்து - எங்களுடைய விசனமும் தீர்ந்து, மகிழ்ந்து - ஸந்தோஷிக்கிறோம்; எல் ஓர் - தருந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) ஒரே இரவில் ஒருத்திக்கு மகனாய்ப் பிறந்து மற்றொருத்திக்குப் பிள்ளையாய் ஒளித்து வளர்ந்து, உனக்குத் தீங்கு செய்ய நினைத்த கஞ்சன் நினைவு தவறும்படி செய்த நீயே எங்கள் பிரதி பந்தங்களைப் போக்கிப் பறை தந்து நோன்பை நிறைவேற்றி வைப்பாயாகில், உன் குணாதிசயங்களைப்பாடி வருத்தம் தீர்ந்து மகிழப்பெறுவோமென்று விண்ணப்பம் செய்கிறது.

மாலே மணிவண்ணா மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண்டி சைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய். (உகு)

(ப - ரை.) மாலே - ஆஸ்ரிதவியாமோஹனாய், மணிவண்ணா - நீலரத்நம் போன்ற வடிவையுடையனாய், மார்கழி நீராடுவான் - மார்கழி நீராடுகைக்கு, மேலையார் - பெரியோர்கள், செய்வனகள் - செய்யுங்கார்யங்கள், வேண்டுவன - வேண்டினவை, கேட்டியேல் - கேட்பாயாகில், ஞாலத்தை யெல்லாம் - பூமியெல்லாம், நடுங்க - அதிரும்படி, முரல்வன - கோஷிக்கும், பாலன்ன வண்ணத்து - பாலுக்கொப்பான வர்ணத்தையுடைய, உன் - தேவரீருடைய, பாஞ்சசன்னியமே போல்வன - ஸ்ரீ பாஞ்ச ஜந்யத்துக்கு ஸத்ருசமான, சங்கங்கள் - சங்கங்கள், போய்ப்பாடுடையனவே - விஸ்தாரகர்ப முற்றதுகளாயும், சால - ச்லாக்யமான, பெரும் - பெரிதான, பறையே - வாத்ய விசேஷமும், பல்லாண்டிசைப் பாரே - மங்களாசாஸநம் பண்ணுவார்களும், கோலவிளக்கே - மங்களதீபமும், கொடியே - த்வஜமும், விதானமே - மேல்கட்டியும், ஆலினிலையாய் - வடபத்ரசாயியான ஸர்வேஸ்வரனே ! அருள் - க்ருபைபண்ணு; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) உங்கள் நோன்புக்கு வேண்டியவற்றை யெல்லாம் சொல்லுங்கோளென்று கண்ணன் கேட்டருள, "உனது பாஞ்சஜன்யம்போல் பகைவர் நடுங்கும்படி ஒலிக்கும் பென்னம் பெருத்த சங்கங்களும்; மிகப் பெரிய பறையும், மங்களாசாஸநம் செய்பவர்களும், விளக்கும், கொடியும், மேற் கட்டியும்; இது போன்றன முன்னோர் கூறிய முறையே நோன்புக்கு வேண்டியவையெல்லாம் கிருபை செய்ய வேணுமென்று பிரார்த்திக்கிறது.

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூட, நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (உள)

(ப - ரை.) கூடாரை - சத்துருக்களை, வெல்லும் - ஜயிக்கிற, சீர் - கல்யாணகுணங்களையுடைய, கோவிந்தா - கோரக்ஷகனானவனே, உன்தன்னை - தேவரீரை, பாடி - ஸ்தோத்ரம்பண்ணி, பறை கொண்டு - ப்ராப்யத்தைலபித்து, யாம் - நாங்கள், பெறு - லபிக்கிற, சம்மானம் - ஸம்மானங்கள், நாடு - லோகத்தார், புகழும் - கீர்த்திக்கிற, பரிசினால் - பஹுமாநத்தால், நன்றாக - செவ்வையாக, சூடகமே - கைகளுக்கிடும் ஆபரணமும், தோள்வளையே - தோளுக்கிடும் ஆபரணமும், தோடே - காதுக்கிடும் ஆபரணங்களும், செவிப்பூவே - கர்ணபுஷ்பமும், பாடகமே - சரண ஆபரணங்களும், என்றனைய - என்று சொல்லப்படுகிற, பல் கலனும் - பஹுவிதாபரணங்களும், யாமணிவோம் - நாங்கள் தரிக்கக் கடவோம், ஆடை - வஸ்திரங்களை, உடுப்போம் - உடுக்கக் கடவோம்; அதன்பின்னே - அதற்குமேல், பால்சோறு - பாலும் ஸாதமும், மூட - முழுகும்படி, நெய்பெய்து - நெய்பரிமாறி, முழங்கைவழிவார - முழங்கையால் வழியும்படியாக, கூடியிருந்து - எல்லாரும் கூடியிருந்து கொண்டு, குளிர்ந்து - ஸுகிக்கவேணும்; ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) நன்றே பெண்கள் நோற்றார்களென்று நாட்டார் கொண்டாட அவ்வவ் அவயவங்களில் நீ எங்களுக்கு ஆபரணங்களைப் பூட்ட வேண்டும். ஆடையுடுத்த வேண்டும். மையெழுத வேண்டும். பிறகு, எல்லோரும்கூட இருந்து நெய் மூடப்பெற்ற பாற்சோற்றை முழங்கைவழியாய்ப் பெருகும்படி சந்தோஷத்தோடு புசிக்கப் பெற வேண்டுமென்று, நோன்பு நோற்ற பின்பு பெறவேண்டிய பேற்றைச் சொல்லுகிறார்கள்.

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல்நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்

சிறுபே ரழைத்தனவும் சீறியரு ளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (உஅ)

(ப - ரை.) கறவைகள் - பசுக்களுடைய, பின் சென்று - பின்தொடர்ந்து, கானம் - காடு, சேர்ந்து - ப்ரவேசித்து, உண்போம் - தேஹயாத்திரை பண்ணிக்கொள்வோம்; அறிவு - ஜ்ஞாநம், ஒன்றும் - அற்பமும், இல்லாத - இல்லாத யாங்கள், ஆய்க்குலத்து - ஆயர்குலத்துதித்த, உன்றன்னை - தேவரீரை, பிறவி பெறுந்தனை - பிறப்பாக லபித்த, புண்ணியம் - உபாயம், யாம் - நாங்கள், உடையோம் - உண்டானவர்கள்; குறைவு - மனக்குறைவு, ஒன்றும்-அற்பமும், இல்லாத-இல்லாதிருக்கிற, கோவிந்தா - ஸ்ரீ கிருஷ்ணனே! உன்தன்னோடு - தேவரீரோடு, உறவேல் - சம்பந்தம், நமக்கும் - இவர்க்கும், இங்கு - இவ் விடத்திலே, ஒழிக்க ஒழியாது - போக்கடிக்கப் போகாது, அறியாத - ஞானசூனியரான, பிள்ளைகளோம் - பெண்பிள்ளைகள், அன்பினால் - ப்ரேமத்தால், உன் தன்னை - தேவரீரை, சிறுபேர் - சிறியபேரால், அழைத்தனவும் - அழைத்ததற்கு, சீறியருளாதே - கோபியாதே கொள்ளும்; இறை - ஸ்வாமி! நீ - தேவரீர், தாராய் - ப்ரஸாதித்தருளாய், பறை - ப்ராப்யத்தை, ஏல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) பசுமேய்ப்பதும் காட்டிற்குச் சென்று உண்பதுமாய் தேஹயாத்திரையே பெரியதாய்க் கொண்டதாயினும் நீ வந்து பிறக்கும்படி பாக்கியம் செய்த ஆயர்குலத்தில் பிறந்தோம்; எப்படிக்கும் நீ குறையொன்று மில்லாதவன்; உனக்கு மெங்களுக்குமுள்ள சம்பந்தத்தை ஒழிக்க உன்னாலு மாகாது; ஞானமற்ற யாங்கள் அன்பேகாரணமாக உன்னைக் குறித்துப் பேசியவைகளிலுள்ள குற்றங்களைப் பொறுத்தருளி பறைதரவேண்டுமென்று அபராத க்ஷாபணம் செய்து கொள்ளுகிறது.

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து உன்
பொற்று மரையடியே போற்றும் பொருள்கேளாய்

பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (உகூ)

(ப - ரை.) சிற்றஞ்சிறுகாலே - அத்யந்தம் ப்ராதக் காலத்தில், வந்து - எல்லாரும் வந்து, உன்னை - தேவரீரை, சேவித்து - ஸேவித்து, உன் - தேவரீருடைய, பொற்றாமரை - ஸப்ருஹணீயமான தாமரை போலேயிருக்கிற, அடியே - திருவடிகளை, போற்றும் - மங்களாசாஸநம்பண்ணுகிற, பொருள் - அபிப்ராயம், கேளாய் - கேளும்; பெற்றம் - பசுக்களை, மேய்த்து - ரக்ஷித்து, உண்ணும் - புஜிக்கிற, குலத்தில் - குலத்திலே, பிறந்து - திருவவதரித்து, நீ - தேவரீர், குற்றேவல் - அந்தரங்க கைங்கர்யம், எங்களை - அடியோங்களை, கொள்ளாமல் - அங்கீகரியாமல், போகாது - போகப்படாது; இற்றைப்பறைகொள்வான் - இந்த வாத்ய விசேஷம் கொள்ளுமவர்கள், அன்று காண் - அன்று காணும், கோவிந்தா - கோரக்ஷகனே! எற்றைக்கும் - என்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும் - இருபத்தொரு ஜன்மங்களிலும், உன்தன்னோடு - உன்னோடு, உற்றோமேயாவோம் - அநந்யார்ஹராயிருக்கவேணும்; உனக்கே நாம் - தேவரீருக்கே நாங்கள், ஆட்செய்வோம் - பணிவிடை செய்ய வேணும்; மற்றைநம் - வேறு விஷயத்தில் செல்லும் எமது, காமங்கள் - இச்சைகளை, மாற்று - மாற்றிவிட வேணும்; எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு இனிது முடிகிறது.

(தா - ம்.) நோன்பென்றோர் வியாஜத்தையிட்டு, பறை பறையென்று சொல்லிக்கொண்டு வந்தோமென்றாலும் எங்கள் கருத்து அதுவல்ல; உஷః காலத்தில் வந்துன்னைத் தொழுது உன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவதே எங்களுக்கு முக்கியமான கைங்கர்யமாகும். எல்லோருக்கும் ஸுலபனாக வேண்டுவதற்

காகவே ஆயர் குலத்தில் வந்து தோன்றிய நீ, நாங்கள் செய்யு மடிமை யேற்றுக் கொள்ளாமல் போகலாமோ? இருபத்தொரு தலைமுறையும் நாங்கள் உனக்கு அடிமை அநந்யார்ஹைகள், மற்று; இதற்குப் புறம்பாயுள்ள எங்கள் மனோரதங்களை நீ மாற்றிவிட வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறது.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
  திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
  பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்
சங்கத் தமிழ்மாலை முப்பதும தப்பாமே [ன
  இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
  எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். (௩௦)

(ப-ரை.) வங்கக்கடல் கடைந்த - கப்பல்களை யுடைத்தான திருப்பாற் கடலைக் கடைந்தமுதந் தந்தருளின, மாதவனை - ஸ்ரீயஃபதியாய், கேசவனை - கண்ணனை, திங்கள் திருமுகத்து - சந்திரனைப் போன்ற திருமுகத்தை யுடையராய், சேயிழையார் - ஆய்ந்த ஆபரணங்களையுடைய பெண்கள், சென்றிறைஞ்சி - போய் மங்களாசாஸனம் பண்ணி, அங்கு அப் பறை கொண்ட ஆற்றை - திருவாய்ப்பாடியிலே அப்பறைகொண்ட விதத்தை, அணி புதுவை - அழகிய ஸ்ரீ வில்லிபுத்தூர், பைங்கமலம்தண் - பசுமையான குளிர்ந்த தாமரைப் புஷ்பங்களாலாகிய, தெரியல் - மாலையை யுடைய, பட்டர்பிரான் - ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வாருடைய, கோதை - திருமகளான ஆண்டாள், சொன்ன - அருளிச்செய்த, சங்கம் - சங்கமான, தமிழ்மாலை - த்ராவிட பாஷையான மாலையை, முப்பதும் - முப்பது பாட்டும், தப்பாமே - தப்பாமல், இங்கு - இந்தப் பூமியிலே, இப்பரிசு - இந்த ப்ரகாரத்தை, உரைப்பார் - அநுசந்தித்தவர்கள், ஈரிரண்டு - நாலாகிய, மால் - பெரிய, வரை - பர்வதங்களைப்போலே யிருக்கிற, தோள் -

புஜங்களையும், செம் - செவந்திருக்கிற, கண் - திருக்கண்களையும், திருமுகத்து - திருமுக மண்டலத்தையுடைய, செல்வ - உபய விபூதிநாயகராகிய, திருமாலால் - ஸ்ரீய:பதியாலே, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், திருவருள் - ஒப்பற்ற கிருபையை, பெற்று - லபித்து, இன்புறுவர் - ப்ரஹ்மாநந்தயுக்தரா யிருப்பார்கள், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ய்.) முன்னொருக்கால் ஆய்ச்சியார் கண்ணனைக் கிட்டிப் பிரார்த்தித்து அபேக்ஷிசம் பெற்றபடியை ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவவதரித்த பட்டர்பிரான் திருக்குமாரத்தியாகிய ஆண்டாள், சங்கப்புலவர் புகழும் செந்தமிழில் முப்பது பாட்டாய் அருளிச்செய்த இந்தத் திருப்பாவை யென்னும் பிரபந்தத்தை அர்த்தஞான மில்லாவிடிலும் பாட்டுமாத்திரம் அநுஸந்திக்கப் பெற்றாலும் ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனது பரிபூர்ணமான கிருபையைப் பெறலாம் என்று பிரபந்தம் கற்றார்க்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறது.

அடிவரவு:—மார்கழி, வையத்து, ஓங்கி, ஆழி, மாயன், புள்ளு, கீசு, கீழ்வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள்ளின், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பத்து, ஏற்ற, அங்கண், மாரி, அன்று, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவைகள், சிற்றம், வங்கம், தை.

சூடிக்கொடுத்த நாச்சியார் திருவடிகளே சரணம்.

திருப்பாவை முற்றிற்று.

வாழி திருநாமம்

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவைமுப்பதுஞ் செப்பினுள் வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னுனுள் வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

புஜங்களையும், செம் - செவந்திருக்கிற, கண் - திருக்கண்களையும், திருமுகத்து - திருமுக மண்டலத்தையுடைய, செல்வ - உபய விபூதிநாயகராகிய, திருமாலால் - ஸ்ரீயஃபதியாலே, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், திருவருள் - ஒப்பற்ற கிருபையை, பெற்று - லபித்து, இன்புறுவர் - ப்ரஹ்மாநந்தயுக்தரா யிருப்பார்கள், எல் ஓர் - தகுந்த ஒப்பற்ற, எம்பாவாய் - எமது நோன்பு முடிகிறது.

(தா - ம்.) முன்னொருக்கால் ஆய்ச்சியார் கண்ணனைக் கிட்டிப் பிரார்த்தித்து அபேக்ஷிதம் பெற்றபடியை ஸ்ரீ வில்லிபுத்தூரில் திருவவதரித்த பட்டர்பிரான் திருக்குமாரத்தியாகிய ஆண்டாள், சங்கப்புலவர் புகழும் செந்தமிழில் முப்பது பாட்டாய் அருளிச்செய்த இந்தத் திருப்பாவை யென்னும் பிரபந்தத்தை அர்த்தஞான மில்லாவிடினும் பாட்டுமாத்திரம் அநுஸந்திக்கப் பெற்றாலும் ஸர்வதேச ஸர்வகாலங்களிலும் ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனது பரிபூர்ணமான கிருபையைப் பெறலாம் என்று பிரபந்தம் கற்றார்க்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறது.

அடிவரவு:—மார்கழி, வையத்து, ஓங்கி, ஆழி, மாயன், புள்ளு, கீசு, கீழ்வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள்ளின், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பத்து, ஏற்ற, அங்கண், மாரி, அன்று, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவைகள், சிற்றம், வங்கம், தை.

சூடிக்கொடுத்த நாச்சியார் திருவடிகளே சரணம்.

திருப்பாவை முற்றிற்று.

வாழி திருநாமம்

திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
    திருப்பாவைமுப்பதுஞ் செப்பினுள் வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
    பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
    உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே
    வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
4	25	பாடற்கடலுள்	பாற்கடலுள்
7	10	முதித்த	முதைத்த
8	10	மணிவிளக்கைத்	அணிவிளக்கைத்
8	14	புகுதருவா	புகுதருவான்
11	27	குலமுடைய	கலமுடைய
18	28	தடக்கையான்	தடக்கையன்
21	9	சிறுமியரோமுக் கறைபறை	சிறுமியரோமுக்கு— அறைபறை
21	10	மணிவண்ண	மணிவண்ணன்
28	5	சிறிச்சிறிதே	சிறுச்சிறிதே
28	8	மிழந்தேலோ	மிழிந்தேலோ
28	8	ரெம்பாபாய்	ரெம்பாவாய்
29	8	கோயினின்றிங்ஙனே	கோயில் நின்றும்— இங்ஙனே
30	15	பகைகெடுக்கு	பகைகெடுக்கும்
31	19	பிறந்தோரிரவில்	பிறந்து ஓரிரவில்
31	21	நினைந்து	நினைந்த

குறிப்பு :—இந் நூலிலுள்ள பாசுரங்களை வாசிப்பதற்கு முன் இந்த பக்கத்தில் கண்டபடி திருத்தங்களை சேர்த்து வாசித்துக் கொள்ளவும்.

திருமகள் விலாச அச்சு நிலயம், சென்னை;—1954.